بسم الله الرحمن الرحيم

அல்கலாம்

AL-KALAM

பத்திராதிபர் :— கூ. அ. அப்துல் மஜீத்.

வால்யூம். 3	1926௵ பிப்ரவரிமீ	பகுதி. 2

கான்பூர் கிலாபத் மகாநாடு.

(மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களின் அக்கிராசனப் பிரசங்கம்.)

கனவான்களே !

1920 ௵ நாகப்பூரில் நடைபெற்ற அகிலஇந்திய கிலாபத் கான்பரன்ஸுக்கு முதன்முறையாக நான் அக்கிராசனம் வகிக்கும்படிச் செய்து நீங்கள் என்னிடம் ஒப்புவித்திருந்த ஊழியத்தையே ஐந்து வருடங் கழிந்தபின் இவ்வமயம் இரண்டாந் தடவையாக எனக்குச் சாட்டி இருக்கின்றீர்கள். மேலும் என்மீது உங்களுக் கிருந்துவரும் நம்பிக்கை, பிரீதி ஆகியவைகளுக்காக நான் உங்களுக்கு நன்றிநிறை வேற்றச் ச்ந்தர்ப்பமளித்ததும் பாராட்டத் தக்கதே.

ஐந்துவருடத்துத் துரிதநிகழ்ச்சி.

இவ்வைந்து வருடகாலத்தை ஜனசமூக ஆயுளுள் ஒரு நீண்ட காலமெனக் கருதமுடியாது. ஜனசமூகத்தின் அளவிறந்த அபாரமான ஆயுளையுற்று நோக்குவோமாயின் இவ்வைந்து வருடங்களும் கரைகாண முடியாத சமுத்திரத்தின் சில துளிகளைக் காட்டிலும் விசேஷமானவை யல்லவென்ற முடிவுக்கு வருவோம். ஆனால் சூரிய ஓட்டத்தின் இவ்வைந்து சுற்றுகளுக்குள் உலகில் நிகழ்ந்திருக்கும் மாறுதல்கள் அளவிடக்கூடியனவா? இவ்வைந்து வருடங்களை நம்

நாட்டின் பூரணமாறுதலுக் குரிய, ஒரு நற்கால மென்றே கூறவேண்டும். இவ்வைந்துவருட காலத்தில் தேகம், அறிவு, உணர்ச்சி முதலிய ஒவ்வொரு மூலையிலும் சந்தேகமின்றி பெரும் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

1914ம் ஆண்டில் ஆரம்பமான மகாயுத்தம் இம்மாறுதல்களைக் கூவியழைத்ததென்றுங் கூறலாம். மேலும், இம்மாறுதல்கள் நம் சகாயமின்றி தாமாகவே இன்று வெகுதுரிதமாய் முன்னேறிக்கொண்டிருப்பதை நோக்கும் அறிவுடையோரில்லையா? சென்ற ஐந்துவருட காலத்து நடவடிக்கையின் முடிவு, பலாபலன் முதலியவைகள் வருங் காலத்திற்கு வேண்டிய திட்டத்தைத் தயார்செய்து விடவில்லையா? வருங்காலமானது, தன்காலத்துள் நிகழவிருக்கும் விசேஷங்களை யொட்டிய நற்செய்திகளைத் தவக்கமின்றி அனுப்பிக்கொண்டேயிருப்பதைப் பலர் கண்கூடாய் காணவில்லையா?

இஸ்லாம் உலகநிகழ்ச்சி.

இந்தியா, இஸ்லாம் உலகம் ஆகியவைகளை யொட்டிய விஷயத்தை மட்டும் இக்கூட்டத்தில் இன்று நாம் பரிசீலனை செய்யவிருக்கின்றோம். பரந்த உலகத்துள் அடங்கியுள்ள இச்சிறு பாகத்தில் பெரும் மாறுதலுக் குரிய காரியங்கள்யாவும் நிகழ்ந்திருக்கின்றன.

புதியதுருக்கித் தோன்றி அது முன்னேற்ற மெய்துவது, எகிப்தின் ராஜீயவாழ்க்கையை யொட்டிய நடவடிக்கைகள் அடிக்கடி மேலோங்குவது, குடியேற்ற நாடுகளைப் பெறுவதற்காகப் பேராசை பிடித்த மேல்நாட்டார் கீழ்நாட்டில் புரியும் நவீனங்கள், இராக், ஷாம், பலஸ்தீன் ஆகியதேசங்களை யபகரித்துக்கொள்ளும் பொருட்டு பிரிட்டிஷும், பிரான்ஸும் பெறுகின்ற அதிகாரப்பத்திரங்கள், உதுமானிய சந்ததியிலிருந்துவந்த கிலாபத்தின் முடிவு, உதுமானிய சந்ததிகளைத் துருக்கிதேசத்திலிருந்து வெளியேற்றல், வடஆப்ரிகாவில் அமீர் முகம்மது இப்னு அப்துல் கரீம் அவர்களுக்கு அடிக்கடிகிடைத்துவரும் ஜெயங்கள், ஹிஜாஸில் நிகழ்ந்த எதிர்பாராத மாறுதல், ஷரீப் ஹுஸைனின் எதேச்சாதிகார ஆக்ஷியின் மரணம், அமீர் இப்னுஸுஊத் அவர்கள் ஹிஜாஸையடைந்தது, ஜஸீரதுல் அரபில் ஒரு புதிய ராஜீய வாழ்க்கை ஜனனமானது, ஷாம்தேசத்தில் அத்தேச ஜனங்களின் பலமான நடவடிக்கைகள், ஈரானில் 'காச்சாரியா' என்னும் சந்ததிகள் ஒழிந்து 'பஹலவி' என்னும் சந்ததியார் ஆக்ஷிப் பொறுப்பை அடைந்தது ஆகியவைகளும், இவையன்றி இத்தகைய

இன்னும் பல ஆச்சரியமான காரியங்களும் இக்குறைந்த ஐந்துவருட காலத்திற்குள் நடைபெற்றிருக்கின்றன வென்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

உலகமாறுதலுக்குரிய இவ்வரும்நிகழ்ச்சிகளின் உண்மையை நாம் நம் தினசரி பிரயாசைகள் காரணமாய் அறியச் சக்தியற்றிருந் தோமாயினும், சரித்திரங்கள் இந்நிகழ்ச்சிகளின் மூலமாய் பல நூற் றுண்டுகளி லேற்படவிருக்கும் மாறுதலைச் சார்ந்த இரகசியங்களைக் கண்டு பிடித்துவிடுமென்பது திண்ணம்.

உள் நாட்டு மாறுதல்கள்.

மனதைக் கவரத்தக்க மேற்கூறியவைகள் வெளிநாட்டு நிகழ்ச்சி யல்லவா ? நம் வாழ்க்கைக்கும் நம்முயற்சிக்கும் ஏற்றஇடம் நம்நாடா கிய இந்தியாதான், என்னும் உண்மையை எச்சந்தர்ப்பத்திலும் மறந் துவிட முடியாது. மேலும் இவ்வைந்து வருடகாலத்தில் நம்நாடு எத் தகைய மாறுதலையும் உணர்ச்சியையும் அடைந்திருக்கிறதென்பதை யோஜித்துப்பாருங்கள். இம்மாறுதலும் உணர்ச்சியும் நம் நாட்டிற்கு இதுவரையளித்திருக்கும் நன்மை, எதிர்காலத்தில் அளிக்கவிருக்கும் ஆதரவு ஆகியவைகளை அளவிட முடியுமா ?

கிலாபத்தியக்கத்தோடு தேசவிடுதலையைக் கோரிப்பிறந்த ஐக்கி யம்,உறுதி, பலம் ஆகியவைகளைக்கொண்டு ஆரம்பமான கிளர்ச்சியின் விசேஷமும் மகத்துவமும் உலகத்தாரின் மதிப்பைப் பெற்றுக் கொண்டன. ஆனால் அக்கிளர்ச்சியானது ஒரு குறிப்பிட்ட எல்லை வரைச் சென்று தடைபட்டுவிட்டதோடு அதற்கு எதிரிடையான வேலைகளும் அதிகமும்மரமாய் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றி விட்டன. ஆதலின் இப்பொழுது உத்ஸாகத்திற்கு பதிலாய் தூக்கமும், ஐக்கியத்திற்கு பதிலாய் வேற்றுமையும்,தேசம்,தேசமக்கள் என்னும் உணர்ச்சிக்கு பதிலாய் ஜாதி,கக்ஷி, என்ற கூச்சலு மேற்பட்டுக்கொண் டிருக்கின்றன. நன்மையைக் கெடுக்கும் தீயவைகள் கொள்ளையிட்டுக் கொள்வதுபோக எஞ்சியுள்ள சக்திகளின் மூலமாய் வேலை நடைபெற ஒட்டாமல் கேடிழைப்பதற்கும் பலவிபரீதமான புதிய கோளாறுகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

கீழ் நாட்டைச் சேர்ந்த இதரதேசங்களில் நடைபெறும் காரியங் களையும் இந்தியாவின் இழியநிலைமையையும் சீர்தூக்கிப்பார்க்க வேண் டும். அந்நாடுகள் சுயேச்சை, முன்னேற்றம் ஆகியவைகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இந்நாளில், தேசவிடுதலையை முன்னிட்டு வெகு மும்மரமாய் உழைத்து வந்த நம் நாடு களைத்துவிட்டது மட்டு

மின்றி போனவழியே திரும்பி வருவதைக்காணும் போது தான் நமக்குப் பெரும் துக்கத்தை மூட்டுகின்றது.

ஆப்ரிகாவிலுள்ள சொற்ப "ரீபியர்" தங்கள் சுயேச்சைக்காக நடத்தும் போரில் பிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய இருதேசங்களும் பன்முறை தோல்வியுற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் உலக மக்களில் ஐந்திலொரு பாகத்தினர் வசித்துவரும் இவ்வகண்ட இந்திய நாடானது அதன் அறியாமையையும் அசட்டுத் தன்மையையுங் கூடத்தோல்வியுறும்படிச் செய்யக்கூட வில்லை.

'ஷாம்' தேசமானது இந்தியாவைப்போலவே பற்பல மதங்களைக்கொண்ட ஓர் பொதுவான நாடாகும். அங்குள்ள 'தருஸி' 'முஸ்லிம்' 'கிருஸ்தவர்' ஆகிய மூன்று கூட்டங்களும் பல நூற்றாண்டுகளாய் ஒன்றுக் கொன்று கொலை, கொள்ளை முதலிய துற்கிருத்தியங்களைப் புரிந்து கொள்வதில் அதிமும்மரமாக விருந்தன வென்பதும் உண்மையே. முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்குமிடையில் மதசச்சரவுகள் இருந்து வந்தன வென்பதற்குச் சிலுவையுத்தச் சரித்திரமே போதியசாக்ஷியமாகும். அந்நாட்டில் சிலுவையுத்தங்களின் பயனாகமட்டும் எட்டு இரத்த வெள்ளங்கள் ஓடி ஓடிக்காய்ந்திருக்கின்றன. ஆனால் இன்று அவர்கள் எல்லோரும் ஒரு மனப்பட்டு தேசிய சுதந்தரத்திற்காக வேலை செய்ய ஆரம்பித்து விட்டனர். "ஒவ்வொரு மனிதனும் ஏற்றுக்கொள்ளுகிற மதம் அவ்வவனுக்கே உரித்தானதாகும். ஆனால் தேசம் தேசமக்களின் பொது உடைமை" என்னும்வானத்தை யளாவிய ஒலி எல்லோரையும் ஐக்கியப்படுத்தி விட்ட இன்று நம் தேச நிலைமையாது? நல்ல உயர்தரக்கல்வியிலும் ராஜீய ஞானத்திலும் சிறந்த இந்தியாவானது, "ஷாம்" தேசம் அடைந்திருக்கின்ற உன்னத எல்லையை நோக்கிச் செல்வதற்குக் கூடத்தயாராயில்லை. ஜாதி வேற்றுமை, மதத்துவேஷம், கக்ஷிப்பிரிவினையின்குறுகிய நோக்கம் முதலிய நோய்கள் ஆளப்படுவோர்க்கேற்படுவது சகஜமாதலின் இந்நோய்களே நம் நாடு விடுதலைக்குரிய வழிச் செல்லவொட்டாமல் வழக்கம்போல் தடுத்து வருகின்றன.

இந்திய முஸ்லிம்கள்.

1920வது வருட ஆரம்பத்திலிருந்ததைப் போலன்றி 1925வது வருடக் கோடியில் இந்திய முஸ்லிம்சமூக வாழ்க்கையைச் சார்ந்த ஒவ்வொரு துறையிலும் விசேஷ மாறுதலேற்பட்டிருக்கிறது. இவ்விரு கால வாழ்க்கைகளும் ஒன்றுக்கொன்று முறண்பட்டிருப்பதாய்க் கூறினும் மிகையாகாது. முஸ்லிம் சமூகத்தின் பொதுவான லக்ஷி

யத்தை அடைவதற்காக இந்திய முஸ்லிம்கள் ஒரு மனப்பட்டு வேலை செய்ய முற்பட்டதும் பற்பல வகுப்புகளாய்ச் சிதறிக்கிடந்த இந்திய முஸ்லிம்கள் ஐக்கியப்பட்டுழைக்கப் பிரீதி கொண்டதும் 1920வது ஆண்டில் குறிப்பிடத் தக்கவையாகும்.

இவ்வமயம் விரித்துக்கூற முடியாத பற்பல இடையூறுகளின் காரணமாய் தேசியப் போரில் இந்து சகோதரர்களைவிட மிகவும் பிற்போக்கடைந்திருந்த இந்திய முஸ்லிம்கள் இன்றைய வாழ்க்கையில் சமூக முன்னேற்றத்திற்காகவும், லக்ஷியத்தை யடைவதற்காகவும், கடமையை நிறைவேற்றுவதற்காகவும், தியாகம் புரிவதற்காகவும் 1920 வது வருடத்திலேயே வழி நடக்க ஆரம்பித்தனர். இவ்வாண்டில் ஆரம்பமாகி மிக தீவிரமாய் நடந்துவந்த அரிய கிளர்ச்சி திடீரென எதிர் பாராத வண்ணம் தடையுண்டதால் ஏற்பட்ட அதிர்ச்சியானது இன்று முஸ்லிம் சமூக ஐக்கியத்தைக்கூட பாழ்பண்ணிவிட்டது.

கூட்டுறவு, ஒற்றுமையுணர்ச்சி ஆகியவைகளுக்கு பதிலாய் இதுபோழ்து, முஸ்லிம்களிடை வேற்றுமையும் அபிப்பிராய பேதங்களும் வியாபித்திருக்கின்றன. முஸ்லிம்களின் நற்கொள்கையும் உறுதியும் ஆடிவிட்டன. மேலும் லக்ஷியத்தை யடைவதற்கான வழி எதுவுமில்லை யென்று கருதுகின்றனர். பொதுவாகவே தேசத்தைப் பிடித்திருக்கின்ற வழிகேடு, மறதி, அயர்வு ஆகிய வெள்ளத்திலும் புயற்காற்றிலும் முஸ்லிம்கள் சிக்குண்டிருக்கின்றனர்.

இவ்விழிய நிலையைவிட்டு ஒதுங்கிநின்று அபிப்பிராயத்தை ஒழுங்குபடுத்தி விசாலமான அறிவைப் பெற முஸ்லிம்கள் அவகாசமற்றிருப்பது சகஜமே. நம் நாட்டைச் சூழ்ந்துகொண்டிருக்கும் இருளைப் போக்கத்தக்க பேரறிவும், உறுதியுமுள்ள பிரகாசமில்லாது போயின் ஜனங்கள் அவநம்பிக்கைக்கும் பீதிக்கும் இலக்காகாமலிருக்க முடியாது. ஆகவே இன்று எங்கும் இப்பீதி அவநம்பிக்கை ஆகியவைகளே நிலவியிருக்கின்றன. அறிவுக் கெட்டாததும் குறிப்பிட முடியாததுமான குறுக்குவழியைக் கண்டுபிடிக்கவும் பலர் முயலுகின்றனர். தேசம் சென்ற வழியைவிட்டு புதுவழி நடக்கவாரம்பிக்க வேண்டுமென்று கூறுவோர் “ எவ்வழியே எம்முறையைக் கொண்டு செல்லலாம் ” என்று வினவப்படும் போழ்து அதற்குத்தக்க விடை பகர அவர்களும் அசக்தர்களாக விருக்கின்றனர். தேசம் இத்தகைய துர்அதிர்ஷ்டத்திற் சிக்குண்டுவிட்ட காலை உறங்கிக் கிடந்த அறியாமையும் நயவஞ்சகமும் விழித்துக்கொண்டு பல விபரீதங்களைக் கிளப்பிவிடுவது ஆச்சரியமல்ல.

நாட்டின் இன்றைய நிலைமை இயற்கைச் சட்டத்திற் குட்பட்டதே.

கனவான்களே! நம்நாட்டின் இன்றைய நிகழ்ச்சிகள் யாவும் எத்தகைய விசனத்தை மூட்டத்தக்கனவாயுமிருக்கலாம். ஆனால் தனிப்பட்ட ஒவ்வொரு நபரைப்போலவே உலகின்கண்சமூகம், தேசம் ஆகியவைகளும் இயற்கைச்சட்டத்திற்குட்பட வேண்டித்தானிருக்குமென்பதில் கொஞ்சமேனும் ஆச்சரியமில்லை யென்பதை நிச்சயித்துக் கொள்ளுங்கள். ஒரு தனிப்பட்ட நபரின் தேகத்திலும் மூளையிலும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பற்பலகுணங்கள் நிகழ்வது பொதுவாயும் சகஜமாயும் இருந்து வருவதை ஏறக்குறைய அறியும் சக்தி ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. உண்மை இவ்வாறிருக்க ஒருநோயைக் கண்டு பீதியடைந்து சிகிச்சைசெய்யமுடியாமல் அயர்ந்துபோவோமாயின் நாம் உண்மை, அறிவு ஆகியவைகளைப் பகிரங்கமாய் மறுக்கும் குற்றவாளிகளாவோம். தேகம் நோய்வாய்ப்படுவது, சௌக்கியமடைவது, சித்தப்பிரமயமேற்படுவது, சித்தசுவாதீனமாவது, உணர்ச்சி வேகமாய்க்கிளம்புவது, அடங்குவது முதலியபல குணங்கள் நம்வாழ்க்கைக்குரிய இயற்கைச்சட்டத்தை யொட்டியனவாகவிருப்பது போலவே சமூகம் தேசம் ஆகியவைகளுக்கும் அக்குணங்கள் இயற்கைச் சட்டப்படி இருந்துவருமென்பதில் ஐயமில்லை. சமூகத்திற்கும் தேசத்திற்கும் ஓர் பொதுவான தேகமும் ஒருவித மூளையும் உண்டு. இவைகளுக்கும் சித்தப்பிரமயம், சித்தசுவாதீனம், நோய், சௌக்கியம் ஆகிய பல நிலைகளுண்டு. தனிப்பட்ட மனிதர்களின் வாழ்க்கையை ஒவ்வொரு இரவிலும் பகலிலும் நாம் அனுபவிக்கின்றோம். தனிப்பட்ட நபர்களின் வாழ்க்கையைச்சார்ந்த எண்ணிறந்த சம்பவங்கள் நானுபக்கங்களிலும் சூழ்ந்திருக்கின்றன. ஆதலின் இவைமுழுவதும் இயற்கைச் சட்டவரம்பிற்குட்பட்டு நிகழ்வதாய் உணர்கின்றோம். ஆனால் சமூகத்தினுடையவும் தேசத்தினுடையவும் வாழ்கையைச்சார்ந்த நடை துரிதமாக இல்லாமல் மிகவும் மெதுவாகவிருக்குமாதலின் அதன் உண்மையை நாம் தெரிந்துகொள்வதில்லை. ஒரு கடிகாரத்தின் நிமிஷத்தைக்காட்டும் முள்ளைப்போல் மணியைக்குறிக்கும் முள்ளும் உண்மையில் நகர்ந்துகொண்டிருப்பினும் இம்முள் நகர்வது கண்ணுக்குப்புலப்படாமலிருப்பதுபோலவே சமூகம், தேசம் ஆகியவைகளின் மாறுதலைச்சார்ந்த நடை கண்ணுக்குப் புலப்படுவதில்லை. சமூகமாறுதலை யொட்டிய ஒரு குறியிலிருந்து மற்றொரு குறிவரைச் செல்வதற்குப் பலகாலமும் பலநூற்றாண்டுகளும் சிலவாகவேண்டிய அவசியமும் இருக்கலாம். ஆனால் நம் குறுகியநோக்கத்திற்கும் குறைந்த அறிவிற்

கும் போதியசக்தியிருக்குமாயின் நோய்வாய்ப்பட்ட தேகக்கூறைஒரு டாக்டரும் மூளையின் ஸ்திதியை ஒரு நிபுணனும் அறிந்துகொள்வது போலவே சமூகமாறு தலைப்பொருத்த நடையின் உண்மையை நாமும் தெரிந்துகொள்ளக்கூடும்.

நாம் நம்பிக்கை இழக்கக் காரணமே இல்லை.

இந்தியா வென்னும் இவ்வகண்ட தேசத்தை ஒரு தனிப்பட்ட நபரின் தேகமென்று வைத்துக்கொண்டு எனக்கு விடை பகருங்கள். தனிப்பட்ட நபர்கள் நோய், நோய்பின்மை, சித்தப்பிரமயம், சித்த சுவாதீனம்முதலிய நிலையையடையவேண்டியது கட்டாயமாக இருப்பதுபோல் அல்லாஹுதஆலாவால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்ற இத்தேசமும் அல்லாஹுதஆலா நாடுதற்கேற்ப அவ்வெல்லாநிலைமைகளையும் அடையவேண்டியிருக்குமல்லவா?

அல்லாஹுதஆலாவால் படைக்கப்பட்டிருக்கும இந்நாட்டின் தேகமானது, நோய் வாய்ப்பட்டிருக்கின்றது. இத்தேகம் சிகிச்சையின் மூலமாய் சொஸ்தமடைய வேண்டும். இத்தேகம் நோய்வாய்ப்பட்டதற்குக் காரணம் ஒன்றல்ல, பலகாரணங்களிருக்கின்றன. நோய்க்குக்காரணமானவைகள் பழைமையானவைகளேயன்றி புதியனவல்ல. மேலும் இந்நோயை மூட்டும் தோஷங்கள் வெளிநாட்டிலிருந்து வருவதுமட்டுமின்றி உள்நாட்டிலும் பலவுண்டு. ஆகவே சொல்லொணாத இப்பெரும்வியாதியின் துற்குணங்கள் வெளிப்படாமலிருக்க முடியுமா? இத்துற்குணங்கள் அடிக்கடி உயர்வதும் தாழ்வதும் சகஜமே. ஒருநோய்பழைமையாகி முழுதேகத்திலும் பரவிவிடுமாயின் அதற்கேற்றவாறு சிகிச்சை செய்ய முயற்சிப்பதோடு போதியபொறுமையும் சகிப்பும் இருந்து வரவேண்டுமல்லவா? வியாதியைப்போக்குதற்காக எடுத்துக்கொள்ளும் முயற்சிகளிலொன்று பலன் தராதுபோயின், அல்லது வியாதியின் ஒருகொடியகுணம் விசேஷிக்குமாயின் நாம் பீதியுறலாமா? வியாதியகன்று சுகமேற்படுதற்கு டாக்டரின் அறிவும் நோயாளியின் சகிப்புத்தன்மையும் இன்றியமையாதனவாகும். மேலும் நோய் ஒழிதற்கு அல்லாஹுதஆலா நியமித்திருக்கும் காலம்வரை சிகிச்சை இடைவிடாது புரியவேண்டுமல்லவா?

மனிதர்களின் சுகாதாரத்தைப் பொருத்தகல்வி, சிகிச்சை முறை ஆகியவைகளைப் போதியவளவு தெரிந்துகொண்டிருக்கின்ற நாம் ஒரு தனிப்பட்ட நபரின் ஒரு சாதாரண சிறிய வியாதி தீரும் காலத்தைக் குறிப்பிட்டுப் புகல சாத்தியமில்லாதிருக்கும் ஸ்திதியில் ஓர் பெரும் சமூகத்தைப் பீடித்திருக்கும் அபாரமான வியாதியைப்போக்

குதற்காகச் செய்யும் சிகிச்சையின் மூலமாய்க் குறிப்பிட்ட சில தினங்களில் அற்புதக் குணத்தை எதிர்பார்ப்பது நியாயமா? சமூகத்தின் தேகத்தை வியாதியினின்று மீட்பதற்காகப் புரிந்த சிகிச்சையின் ஆரம்பப்பிரயத்தனங்கள் பலனளிக்கவில்லையென்றாவது பலன் சீக்கிரத்தில் கிட்டவில்லையென்றாவது கூறி நம்பிக்கையிழந்து பீதியுறலாமா? வியாதியின் கொடுமை, துற்குணம் ஆகியவைகளைக்கண்டு நாம் வருந்துவோமாயினும் தக்க முகாந்தரமின்றி சுகத்தையடைவதற்குரிய கொள்கை நம்பிக்கை ஆகியவைகளை இழந்து விடுவோமா?

இந்திய பிரச்னையின் லக்ஷியமும் அதன் கோள்கையும்.

கனவான்களே! தேசத்தின் தற்கால நிலைமை ஒவ்வொரு தேசாபிமானியின் மனத்தையும் வாட்டத்தக்கதாயிருப்பது நிச்சயமே. ஆனால் இந்நிலைமை அவநம்பிக்கைக்கோ அல்லது கொள்கையின் மாறுதலுக்கோ காரணமாயிருந்து வருவதையொட்டி அதிக நிதானத்தோடு என் ஆச்சரியத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நம்நாட்டின் விடுதலையையும், சமூகமுன்னேற்றத்தையும் கோரி நாம் வழிநடக்க ஆரம்பிக்கவில்லையா? கோடிக்கணக்கான ஜனங்களின் எண்ணத்திலும் செய்கையிலும் மாறுதலையுண்டு பண்ணவேண்டிய பெரும் பொறுப்பு நம்மை நோக்கி நிற்கவில்லையா? மதம், குலம், ஜாதி, சரிதம், ஜீவனம், ஒழுக்கம், பாஷை, சடங்கு, நடையுடைபாவனை முதலியவைகளிலுள்ள பலமான வேற்றுமை, பேதமை, கல்வியின்மை, அறியாமை, அசட்டுத்தனம், அஞ்ஞானம் ஆகியவைகளைச் சார்ந்த கணக்கற்ற இடையூறுகள் நாம்நோக்கிச் செல்லும் வழியிலே குறுக்கிட்டு நம்மைத் துன்புறுத்துவது ஆச்சரியமா?

பலநூற்றாண்டுகளாய் நம் நாட்டைப் பிடித்திருக்கும் பழைமையான இக்கொடிய நோய்களை யகற்றுவதற்காகச் சிலவருடங்கள் மட்டுமே நாம் சிகிச்சை செய்தோமென்பது உண்மையல்லவா? எல்லையற்ற ஆயுளைக்கொண்டுள்ள சமூகங்களின் வாழ்க்கையை நோக்குவோர் இச்சிலவருடங்களைச் சில நாட்களாகவே மதிக்கவேண்டுமல்லவா? வழி நடக்கும்போதேற்படும் கஷ்ட நிஷ்டூரங்களைக் கண்டபோதெல்லாம் தைரியமிழந்து நடக்கமுடியாமல் உட்கார்ந்து விடக்கூடிய பேதைகளைப்போலவும் அறிவிலிகளைப் போலவுமின்றி நாம் கல்வியின் பிரகாசமும் உறுதியும் நற்கொள்கையுமுள்ளவர்களாய் வேலை செய்ய முற்பட்டிருப்போமாயின் தெளிவாயும் சாதாரணமாயுமுள்ள இச்சில கேள்விகளுக்குச் சந்தேகமின்றி "ஆம்" என்ற விடையைப் பெறக்கூடும்,

நிலைமை மாறிவிடுமாயின், முயற்சி பலனளிக்காதுபோயின், கஷ்ட நிஷ்டூரங்களும் தடைகளும் அதிகரிக்குமாயின், துன்பங்களை யேற்கும் முறை, நிர்மாணத்திட்டம், வேலையின் அளவு ஆகியவைகளில் மாறுதலேற்படலாம். ஆனால் எந்நிலைமையிலும் எத்தகையசந்தர்ப்பத்திலும் நம் கொள்கையில் மாறுதலேற்படலாமா?

நம் விடுதலையைக் கோரிச் செல்லும்வழியில், நம் நாட்டின் மறதியும் அறியாமையும் பற்பல நவீனத்தடைகளை யுண்டுபண்ணி விடுமாயின் நம் லக்ஷியம் நம்மைவிட்டு வெகுதூரம் சென்று விட்டதோடு நாம் உத்தேசித்திருந்ததைக் காட்டினும் அதிகவேலை செய்யவேண்டியவர்களாக விருக்கிறோம், என்னும் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டுமே யன்றி அடிமைவாழ்க்கையில் திருப்திகொண்டு நமக்கு சுயேச்சை அவசியமில்லையெனக் கருதி அமைதிக்கும் சமாதானத்திற்கும் பதிலாய் அடிமை வாழ்க்கைக்கு இன்றியமையாத கலகத்தையும் சச்சரவையும் புரிவதென்ற முடிவைச் செய்துகொள்வது நியாயமா? கல்வி அறிவின் பிரகாசத்தை யொட்டிய ஒவ்வொரு காரியத்திற்கும் ஓர் அடிப்படை அவசியமாகவிருப்பதுபோல் நம் விடுதலைப்போர் அடிப்படையைக் கொண்டிருக்குமாயின் இவ்வடிப்படையில் மாறுதலேற்பட நியாயமில்லை.

இடைக்கால ஓய்வும் மறுமுறை வேலைசெய்ய அழைத்தலும்.

தேசத்தின் உண்மையான நிலைமை என்னவெனின்? நாம் மும்மரமாய் வேலைசெய்யவேண்டிய காலம் முடிந்து மீண்டும் அத்தகைய காலம் இதுவரை ஆரம்பமாகவில்லை என்பதே. ஆதலின் இடைக்கால ஓய்வின் மூலமாய் மனத்தளர்ச்சி, பீதி ஆகியவைகள் நம் நாட்டைச் சூழ்ந்துகொண்டன. இப்பீதி ஒழிவதற்கு அதிசீக்கிரத்தில் உணர்ச்சியின் ஒரு புதியகாலம் ஆரம்பமாகவேண்டும். அதுபோழ்து ஒழுங்கான முறையில் வேலை நடைபெறுதற்குவேண்டிய நம் சக்திகளெல்லாவற்றையும் ஒரேகயிற்றில் கோர்த்து ஒருருவமாகவமைத்துக்கொள்ளவேண்டும். மேலும் சென்றுபோன துர்அதிர்ஷ்டங்களை நினைத்து விசனப்படாமலும் நம்பிக்கையைக் கெடுக்குங் காலநிகழ்ச்சிகளைக் கண்டு தைரியத்தை இழக்காமலும் வேலைசெய்ய முற்பட்டு நமக்கேற்ற ஒரு புதிய நற்காலத்தை அழைத்துவிடவேண்டும்.

கனவான்களே! என்எழுதுகோலின் மூலமாய் பலஅரியநூல்களை இயற்றுவதைச் சார்ந்த ஊழியத்திற்கே என்னை அற்பணஞ் செய்துவிடவேண்டுமென்று அநேகவருடங்களாய் நான் முயற்சித்து வருவதை உங்களுள் பல நண்பர்கள் அறியாதிருக்கமாட்டார்கள். நூல்

களை இயற்றுவதில் எனக்கு அதிகப் பிரீதி இருந்து வருவதற்காக மட்டும் யான் இம்முயற்சியைச் செய்பவனல்லன். ஆனால் இன்றியமையாத பல அரிய நூல்களை இயற்றுவதைக் காட்டினும் அதிக நன்மை பயக்கத்தக்க ஊழியம் என்னைப் பொருத்தவரையில் வேறெதுவுமில்லை என்பதே என் நம்பிக்கையாகும்.

சமூகத்தின் நன்மை, தேசத்தின் விடுதலை ஆகியவைகளை முன்னிட்ட இத்தகைய நடவடிக்கைகளில் கலந்துகொள்வதோடு நூல்களையும் இயற்றிவர சென்ற ஐந்து ஆண்டுகளில் பன்முறை முயற்சித்தேன். ஆனால் தனித்திருந்து வேலை செய்ய அவகாசமேற்படாதவரை நூல்களை இயற்றுவது அசாத்தியமென்பதைத் தெரிந்துகொண்டேன். ஆதலின் சமூகம், தேசம் ஆகியவைகளின் நன்மையைக் கோரி நடைபெறுங் கூட்டங்களில் தற்கால சாந்தியாகக் கலந்துகொள்ளாமல் ஒதுங்கியிருக்கவேண்டுமென்றும், ஒருசமயம் கலந்துகொள்ள நேர்ந்தால் என் பேரூழியம் அனுமதிக்கும் வரையே கலந்துகொள்ளலாமென்றும் தீர்மானித்துக்கொண்டு என் காரியத்தில் ஈடுபட்டிருந்தபோழ்து இம்மகாநாட்டிற்கு அக்கிராசனம் வகிக்கும்படி என்னைக் கூவியழைத்தீர்கள்.

ஆகவே இப்புதிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள நான் தயங்கியது சகஜமாதலின் சற்று பின்வாங்கி தேசத்தின் நாலுபக்கங்களிலுமுள்ள நிகழ்ச்சிகளை நோட்டமிட்டேன். தேசநிலைபானது என்தீர்மானத்தை மாற்றி இவ்வூழியத்தை யேற்றுக்கொள்ளும்படி அறிவித்ததற்கேற்ப நான் இசைந்தேன். காலநிலையிடும் கட்டளைக்குட்பட்டு வேலை செய்வதே நம்போன்ற சமூகச்சேவை புரிவோரின் நல்லூழியமாகும். தேசநிலையின் கட்டளைக்கிணங்கி நம்விருப்பம், அபிப்பிராயம் ஆகியவைகளைச்சார்ந்த பலகாரியங்களை விட்டுக்கொடுப்பதுபோலவே நம் தீர்மானத்தையும் விட்டுக்கொடுக்கவேண்டும். ஆனது பற்றியே உங்களின் அழைப்புக்கிணங்கி இதோ உங்கள் சமூகத்தையடைந்திருக்கின்றேன். ஆகவே மீண்டும் நம் லக்ஷியத்தை அடைவதற்கான பிரயாணத்துக்காயத்தஞ் செய்வோம் வாருங்கள்.

இப்பிரயாணம் தேசத்தின் விடுதலையையும் சமூகத்தின் நன்மையையும் பொருத்ததாகும். மனு ஜன்மத்தின் உயர்வு, அந்தஸ்து ஆகியவைகளை நாம் அடைவதற்கான எல்லையை நோக்கிச் செல்லவேண்டும். நாம் இழந்துவிட்ட நற்பாக்கியமிருக்கும் இல்லத்தைத் தேடிப்பிடிக்க வெளிக்கிளம்புவோமாக. நாம் இந்த நல்வழிச் செல்லாமல் தடுக்கக்கூடிய பல தடைகள் நம்மைச் சந்திக்கும். அத்தடைகளை

ஒதுக்கித் தள்ளிக்கொண்டிருக்கவும் வேண்டும். அபாயம், கஷ்டநிஷ்டூரம் முதலிய பல கேடுகளைத் தாண்டிச் செல்லவேண்டியவர்களாக விருப்போம். "விலைமதிக்கத்தகாத இப்பெரும் பாக்கியத்தை யடைவதற்காகச் செல்லும் வழி தூரமாக விருப்பதையாவது பிரயாணத்தில் நிகழும் சங்கடங்களையாவது பொருட்பண்ணுவது நியாயமா?" என்னும் என் வினாவிற்கு அல்லாஹுதஆலாவை முன்னிட்டுத்தக்க விடை பகருவீர்களா? சுயேச்சையென்னும் சிறப்புற்ற அரும்பாக்கியத்தை யடைவதற்குச்செல்ல ஆரம்பித்த நாம் எத்தனை தூரம்சென்றோம்? இதற்குள் ஓய்வு எடுத்துக்கொள்ளக்கருதி உட்காரத்தகுமா? சமூகத்தின் நன்மையைக்கோரி நாம் அடைய வேண்டிய எல்லையை நோக்கி இச்சிலவருடங்களில் சொற்பஅடிகளே எடுத்துவைத்திருக்கின்றோமல்லவா?

மரணத்திற்குட்பட்டுவிட்ட நாம் ஜீவிக்கவேண்டுமானால், க்ஷீணதிசையில் ஆழ்ந்துகிடக்கும் நாம்முன்னேற்றமடைய வேண்டுமானால், இழிய நிலைமையில் புரண்டுகொண்டிருக்கும் நாம் மானிடச் சிறப்பையெய்தவேண்டுமானால் நாம் எத்தனைப்பிரயாணங்கள் செய்யவேண்டியிருக்குமென்பதை அறியோம். ஒவ்வொரு பிரயாணத்தின் போதும் புதியஉறுதியும் தக்க தைரியமும் கொண்டு வழிச்செல்ல முற்படவேண்டும். நாம் நம் உன்னத லக்ஷியத்தை மறந்துவிடாமல் அதை அடையும் பொருட்டு சதா வழிச்சென்றுகொண்டு மட்டுமிருப்போமானால் இவ்வாறு வழிச்செல்வதுகூட நம்லக்ஷியந்தான் என்பதை நிச்சயித்துக் கொள்ளுங்கள்.

நாம் உண்மையில் சத்தியவழிச் செல்லத் தயாராக விருக்கின்றோமா? என்னும் என் வினாவிற்கு இன்று நாக்கள் சரியான விடை பகரமுடியாது. ஆனால் வரும் வருடக்கடைசியில் நம் தேகத்தைச் சார்ந்த அங்கங்களளிக்கும் விடையே ஏற்றதாகும். வேலை செய்யத் தயாராகி விட்டோமென்னும் விளம்பரம், அறிக்கை, அழகான கூற்று முதலியவைகளை யொழித்து உண்மையாகவே வேலைசெய்ய முற்பட்டுவிடவேண்டும்.

இற்றைய காரியம்.

கனவான்களே! இதுவரை நான்கூறியமுகவுரைகள் அவசியமானவையே, ஆனால் இன்று நம்மைநோக்கி நிற்கும் விஷயங்களை யொட்டி கவனம் செலுத்த அனுமதிப்பீர்களாக. உங்களிடம் நான்மிகச்சுருக்கமான விண்ணப்பத்தையே செய்துகொள்ளுவேன். ஆர்ப்பாடமான சடங்குகளையும்,வழக்கத்தைச்சார்ந்த அநுஷ்டானங்களையும்ஒழித்து

அவைகளுக்குப் பதிலாக கூடியவரை உண்மையையும் நற்செய்கை யையும் கடைப்பிடித்தொழுகும்படிக் கோருகிறேன். அக்கிராசனப் பிரசங்கத்தை வரைந்து அச்சிட்டு வாசிக்கும் ஆர்ப்பாடமான காரியத்தைவிட்டு நான் நீங்கிவிட்டதாய் விளம்பரம் செய்கின்றேன். இது என் கோரிக்கைக்கே முதற்காரியமாகும். அக்கிராசனப் பிரசங்கமானது அதிக கஷ்டத்தோடு இயற்றப்படும் அரிய வருடாந்தர நூலாக விளங்கலாம். இப்பிரசங்கம் தேசத்தின் பாஷாஞானம் நிறைந்த நூலாகவுமிருந்து வரக்கூடும். ஆனால் இப்பிரசங்கத்தை வாசிப்பதற்கவசியமற்ற இடத்தில் வாசிக்கப்படுவதோடு, இதை வாசிப்பதற்கவசியமில்லாத நல்ல சந்தர்ப்பமும் வியர்த்தமாகின்றது. இவ்விரு காரணங்களே அக்கிராசனப் பிரசங்கத்தை வரைந்து வாசிப்பது ஏற்கத்தகாத காரியமெனக் கூறுதற்குப் போதிய சாக்ஷியமாகும்.

எழுதிப்படிக்கும் பிரசங்கமானது மனதிற்குப் பிடித்தமற்றதாக விருக்கும்போது அதைக்கேட்பது சபையோருக்குப் பெரும் கஷ்டமாக இருக்குமல்லவா? எழுதி அச்சிட்டப் பிரசங்கத்தை ஒவ்வொருவரும் அவகாசமுள்ளபோது வாசித்து விஷயத்தை யறிந்து கொண்டாலென்ன? எவ்வாறாயினும் ஒரு சடங்கை நிறைவேற்றி விட வேண்டு மெனக்கருதி எழுதி அச்சிடப்பட்ட அக்கிராசனப் பிரசங்கத்தைப் படிப்பதற்காக சுமார் மூன்று அல்லது நான்கு மணி நேரம் வியர்த்தமாகின்றது. இவ்வழக்கத்தின் மூலமாய் ஏற்படும் கஷ்டத்தை நம் கூட்டங்களில் சதா உணர்ந்திருக்கின்றேன். ஆதலின் சபையோர்க்குக் கஷ்டத்தை யுண்டுபண்ண யான் இஷ்டப்படவில்லை. இச்சந்தர்ப்பத்தில் விவாதித்து முடிவு செய்வதற்கருகனை காரியங்கள் பல விருக்கின்றன என்பதைச் சந்தேகமின்றி நான் அறிவேன். ஆனால் வேலை செய்வதற்குரிய வழிகளைக் கண்டு பிடிப்பதற்கு பதிலாய் இத்தகைய கூட்டங்களில் விவாதம் புரிந்து கொண்டிருக்க என்ன நியாயமுண்டோ? தெரியவில்லை. பத்திரிகைகளின் மூலமாயும், துண்டுப் பிரசுரங்களின் மூலமாயும் வேண்டுமளவு சகல விஷயங்களையும் விவாதித்துக்கொள்ள முடியும். ஆதலின் இப்பன்னிரண்டு மாதங்களில் நாம் எத்திட்டத்தைக் கைக்கொண்டு வேலை செய்யவேண்டு மென்பதைப்பற்றியே உங்களிடத்தில் நான் இவ்வமயம் கூறவேண்டி யிருக்கின்றது.

இவ்வருடத்தில் நிகழ்ந்த சில சம்பவங்கள்.

கனவான்களே! தேசபந்து சித்தரஞ்சன தாஸின் மரணமானது தேசத்திற்குப் பெரியதொரு நஷ்டமாகும். ஒவ்வொரு தேசமும்

சமூகமும் கௌரவமடைதற்குக் காரணமான ராஜீய தலைவருள் தேச பந்துவும் ஒருவராவர். தேசபந்துவின் தேசாபிமானம், ராஜீயஞானம், உண்மையான ஒற்றுமையுணர்ச்சி, அளவற்ற சக்தி, அசைக்கமுடியாத உறுதி முதலியவைகள் நம் நாட்டிற்கு மிக்க அவசியமாக விருந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நாம் தேசபந்துவை இழந்துவிட்டோம். ஸர்சுரேந்தர்னாத் பானர்ஜியின் மரணத்தின் மூலமாயும் இந்தியராஜீய தலைவர்களின் பீடத்தில் மற்றொன்று காலியாகி விட்டது. ஸர்பானர்ஜி அவர்கள் தம் கடைகாலத்தில் எம் முறையை யேற்றுக்கொண்டிருப்பினும் நம் நாட்டில் ராஜீய உணர்ச்சி ஜனனமான காலை இவர் புரிந்த ஊழியமானது இந்திய சரித்திரத்தில் தக்கஇடத்தைப்பெற்றிருக்கின்றது. இவ்வரும் நேரம் விரயமாகாமலிருக்க நாம் எத்தகையகவனம் செலுத்திக்கொண்டிருப்பினும் இவ்விரு தலைவர்களின் மரணத்தை முன்னிட்டு ஹிருதயத்திலுண்டாயிருக்கும் துக்கத்தை வெளியிடாமல் தடுக்க முடியாது.

இந்தியாவிலிருந்துவரும் ஆக்ஷியின் ஏதேச்சாதிகார முறையானது இவ்வருடமும் முன்போலவே மும்மரமாய் வேலைசெய்து வருவதோடு, இந்தியா தன் ஆதரவற்ற அடிமைவாழ்க்கையின் இழிய நிலையை யுணர்ந்தவண்ணமாகவே இருந்து வருகிறது. இந்தியாவின் அடிமை வாழ்க்கையானது இந்தியமக்களை க்ஷீணதிசையின் பள்ளத்தில் தாழ்த்தி இருக்கும் உண்மையை மெய்ப்பிப்பதற்குத் தென் ஆப்ரிகா "ஏஷியா டிக்பில்" லும் ஒரு புதிய சாக்ஷியமாக விருக்கின்றது. ஜாதி வேற்றுமையை அடிப்படையாய்க்கொண்ட மேல் நாட்டின் இருமாப்பானது முழுவுலகத்திலும் மனிதர்களின் பிறப்புரிமையைப் பாழ் பண்ணும் பெருங் கேடாக இருந்து வருகிறது. மேலும் அடிமை வாழ்க்கைக் குட்பட்டிருக்கும் நாடுகளுள் இந்தியாமிக்க கொடியஅக்கினிக்குழியில் விழுந்து துடித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே இவ்விபரீத நிலையிலுள்ள இந்தியாதன் அடிமை வாழ்க்கையை யொட்டிய ஒரு நாளையேனும் சகித்துக்கொள்ள இஷ்டப்படுமாயின் அஃது உண்மையில் மற்ற நாடுகள் நீண்டகாலமாய் அனுபவிக்கும் அடிமைவாழ்க்கையைச் சார்ந்த கடைசி எல்லைக்குச் சமானமாகும். நம் துர்அதிர்ஷ்டத்தைக்கொண்ட இச்சகிப்புத் தன்மையானது எதுவரை நீடித்திருக்குமென்பதை அறியக்கூடவில்லை. ஆ விசனமே!

நமது தென் ஆப்ரிக்கா சகோதரர்களின் தூதுவக்கோஷ்டி இவ்வமயம் நம்மிடை கலந்துகொண்டிருக்குமென்று நம்புகிறேன். மேலும் இத்தூதுவக்கூட்டத்திற்கு உங்கள்சார்பாக நான்கூறும் உறுதிமொழி

யாவது:—"துர்அதிர்ஷ்டவசத்தால் இன்று நாங்கள் கைகாலற்றவர்களாயிருப்பினும் கடலுக்கப்பாலுள்ள எங்கள் சகோதரர்களின் கஷ்டநிலையை எங்களின் ஒவ்வொரு ஹிருதயமும் உணர்ந்துகொண்டுதான் இருக்கிறது. நாங்கள் அச்சகோதரர்களின் சுயேச்சைக்குரிய எத்தகைய முயற்சியிலும் சாத்யமான எல்லா சக்திகளோடும் சம்பந்தப்பட்டிருக்கின்றோம்"

கனவான்களே! இந்தியாவுக்கு வெளியே நிகழ்ந்திருக்கும் சில சம்பவங்கள் சென்ற வருடக் காரியமாக மட்டுமின்றி இக்கடைக் காலசம்பவ முழுவதிலும் விசேஷ ஞாபகார்த்தமானவையாக விருக்கும். இச்சம்பவங்களைச் சரித்திரங்கள் சமீபகாலத்தில் பற்பலதலையங்கங்களினடியே வரையுமென்பது திண்ணம்.

மோசூல்.

'ஜினிவாவிலிருந்துவரும் பிரிட்டிஷ், பிரான்ஸ் ஆகிய மந்திரி சபைகளின் மற்றொரு நவீன காரியாலயத்திற்குச் சர்வதேச சங்கமென்ற பெரும்பெயர் இருந்துவரினும் இச்சங்கமானது கடைசியாய் மோசூல் சம்பந்தமான வழக்கை யொட்டித்தீர்ப்பளித்து விட்டது. இத்தீர்ப்பு நியாயத்திற்கு எத்தகைய மாறாகவிருப்பினும் எதிர்பார்த்ததற்கு மாற்றமானதன்று. துருக்கியர் வசிக்கும் ஒரு முக்கியமான பாகத்தைத் துருக்கியினின்றும் பிரித்து விடுவதற்காகச் செய்யப்படும் பகிரங்கமான இவ்வநியாயத்தைத் துருக்கி ஏற்றுக்கொள்ளுமென்று நாம் நம்பமுடியுமா? இவ்வநியாயத்தை முன்னிட்டுத் துருக்கியர் யுத்தம் செய்யவேண்டிய நிர்ப்பந்த மேற்படின் அதையொட்டி இந்தியாவின் நிலை மிக்கத்தெளிவாக விருக்கின்றது.

இந்தியா இன்று பற்பல பலஹீனத்திற்கும் மறதிக்கும் உட்பட்டிருப்பது உண்மையே. ஆனால் இந்நாடு ஒரு நூற்றாண்டுக் கதிகமான காலமாய்ச் சிக்குண்டிருக்கும் கேட்டிற்குக் காரணமான தவறுகளை மீண்டும் இழைத்துக்கொள்ள மாட்டாதென்பது நிச்சயம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நியாயமற்ற எண்ணத்தைப் பூர்த்திசெய்து கொள்ளுவதற்காகச்செய்யப்படும் போரில் தன்னுடைய எவ்விதச் சக்தியையும் ஈடுசெய்ய இந்தியா இன்று மறுத்துவிடுமென்பதுதிண்ணம். சமூகம், தேசம் ஆகியவைகளின் நியாயமான உரிமையைக் காக்கும் பொருட்டு போர்க்களத்தையடைய வேண்டிய நிர்பந்தமேற்பட்ட துருக்கியரின் மார்பில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் உத்திரவுக்கிணங்கி குண்டுப்பிரயோகம் செய்ய இந்தியாவின் துர்அதிர்ஷ்டமான முஸ்லிம்கள் இஷ்டப்பட மாட்டார்களென்பதில் ஐயமுண்டா?

மிருகத் தன்மையால் 'ஷாம்' தேசத்திற் கேற்பட்டிருக்கும் அழிவு, திம்ஷக் (தமஸ்கஸ்) என்னும் பட்டினத்திற்குண்டாயிருக்கும் நாசம், பட்டினவாசிகள் பயங்கரமான முறையில் படுகொலை செய்யப் பட்டது முதலிய துர்க்கிருத்தியங்கள் இன்று மனத்திற்கு அளவிறந்த விசனத்தை மூட்டத்தக்கதாக விருக்கின்றன. உலக சரித்திரத்தில் கீர்த்திவாய்ந்த பட்டினங்களுள் இச்சிறப்பு வாய்ந்த அழகிய திம்ஷக் பட்டினமுமொன்று. இத்தேசத்தின் ஒவ்வொரு பாகமும் விலை மதிக்கத்தகாத ஞாபகச் சின்னங்கள் நிறைந்த புதையல்களாக விருக்கின்றது. இஸ்லாம் சிறந்து விளங்கிய காலத்து ஒரு நூற் றுண்டுவரை இந்நகர் இஸ்லாமிய நாடுகளின் ராஜதானிப் பட்டின மாகவு மிருந்தது. இப்பட்டினத்தின் சரித்திரத்தை யொட்டி "ஹாபில் இப்னு அஸாக்கிர்" என்னும்பெரியார் 80, பெரும் வால்யூம் களை வரைய நேர்ந்தது. இம்மகத்தான பட்டினம் இன்று பாழாகிக் கிடக்கின்றது. யுத்த களங்களிலுங்கூட பீதியையுண்டு பண்ணத் தக்க வண்ணம் அப்பட்டினத்தை எரித்து சாம்பலாக்கக் கருதி 72 மணிநேரம் வரை பீரங்கிப் பிரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. இக்குண்டு பிரயோகத்தின் மூலமாய் இவ்வரும் அழகியப் பட்டினம் கொலைக்களமாயும் புதைக்குழியாயும் மாறிற்று.

இக்கொடிய அதிக்கிரமத்தைப் புரிந்த கரத்தை யறிவீர்களா? நாகரீகத்தில் முதிர்ந்த பிரான்ஸின் கரமே இவ்வநியாயத்தைப் புரிந் திருக்கிறது. பெரும் புரட்சியின் மூலமாய் மனிதர்களுக்கு அவர் களின் பிறப்புரிமையாகிய சுயேச்சை, சமத்துவம் ஆகிய நற்பாக்கி யத்தை யளித்ததாய்க் கூறிக்கொள்ளும் பிரான்ஸ் தேசத்தின் கரங் கள் தமஸ்கஸ் பட்டினத்தை சாம்பற்குவியலாக்கிவிட்டன. "மனு ஜன்மத்தின் மீட்சிக்குரியோர்" என்று 'வால்டேர்', 'மேராயு', 'லாபேட்', 'தீக்டியுகோ', முதலியவர்களால் புகழப்பெற்ற பிரஞ்சுக்கா ரர்கள் திம்ஷக் நகரை அக்கினிக் கிரையாக்கினர். ஆ! விசனமே!!

கனவான்களே! "மனுஜன்மத்தின் மீட்சிக்குரியோ" ரென்று புகழப்பட்டவர்களின் கரங்களால் நாகரீகம் மிகுந்த இந்நாளில் விளைந் திருக்கும் பயங்கரமான அழிவுகளை எடுத்துக்கூறப்பட்டபின் இத் தகைய சந்தர்ப்பத்தில் உலகின்கண் அறிஞர்கள் கூறுவதைப்போல் யானும் புகலுவேனென நீங்கள் எதிர்பார்ப்பது சகஜமே. மானிடத் தன்மை, நாகரீகம் ஆகியவைகளைச்சுட்டிக்காட்டுவேனென்றும், மனி தர்களின் பிறப்புரிமையும், நியாயமும் அழிவதை யொட்டிக் கண் ணீர் சொரிவேனென்றும், கீழ்நாட்டின் துர்அதிர்ஷ்டமுள்ள சமூகங்

களை அடக்கி ஆளுவதற்காகக் கீழ்நாட்டாரின்மீது தயைகூர்ந்து மேல் நாட்டின் ஆக்ஷிகளுக்கு அதிகாரப்பத்திரமளிக்கும் சர்வதேசசங் கத்தைப்பற்றி ஞாபகமூட்டுவேனென்றும் நீங்கள் எதிர்பார்த்திருக்க லாம். ஆனால் யான் இதற்குத்தயாராயில்லை. இத்தகைய நடவடிக் கைகள் உபயோகமற்றவையென்பது மட்டுமின்றி ஓர் உண்மையையும் அறிவையும் மறுத்துச் செய்யும் குற்றமுமாகும்.

அளவுகடந்த பேராசையை முன்னிட்டு மனிதர்கள் புரிந்த பயங் கரமான அநியாயம் உலகின்கண் நிகழ்ந்துவிட்ட காரியமாதலின் அதை எடுத்துக்கூற எனக்குச்சக்தியுண்டு. ஆனால் உண்மையில் எதுவுமின்றி பூஜியமான நாகரீகம், நியாயம் ஆகியவைகளில் நம்பிக் கைகொண்டு வார்த்தையாட என்னால் முடியாது.

மனிதர்களால் இழைக்கப்படும் அநியாயம்,துர்க்கிருத்தியம் ஆகி யவைகள் என்றும்போலவே இன்றைக்குமிருக்கின்றன. ஆனதுபற் றியே அவைகளாலேற்படும் தீச்செயலை நாம் காண்கின்றோம். மானு ஷீகத்தன்மை, நியாயம் ஆகியவைகள் எவ்விடத்திலேனுமில்லாதி ருக்கின்ற நிலையில் அநியாயமேற்படுவதைக்கண்டு ஆச்சரியமெய் துவதெங்ஙனம்? பலமானது பலஹீனம், மறதி ஆகியவைகளோடு எக்காலத்திலேனும் நியாயம் புரிந்திருந்தாலல்லவா பலத்தினிடம் இன்றும் நியாயத்தை எதிர்பார்க்கலாம்? பலஹீனம் கோருகின்ற ஒவ்வொரு நியாயத்திற்கும் சக்தியினிடம் அசக்தி பெறக்கருதும் தயையென்றே அறிவிக்கப்படுகின்றது. மேலும் இன்று உலகில் தயை புரிவோரில்லை. பலிஷ்டரின் அவசியத்தை நிறைவேற்றிக்கொள்வதை இக்காலத்து நியாயமெனக் கூறுகின்றனர். பலிஷ்டர் உண்மையை மறுத்துச் செய்யும் எத்தகைய சூட்சியையும்,மோசத்தையும் நியாயமெ ன்றே அறிவிக்கப்படுகின்றது.

ஹிஜாஸ் என்னும் பரிசுத்தபூமியில் நிகழ்ந்திருக்கின்ற பலதுக்க கரமான சம்பவங்கள் இஸ்லாமிய முன்னேற்றம் சீர்திருத்தம் ஆகிய வைகளுக்குரிய வாயிலைத்திறந்துவிடுமென்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் அத்தேசவாசிகளின் பரிதாபகரமான நிலைமையானது நம் மனதை வாட்டுகின்றது. இஸ்லாம், அரேபியா ஆகிய இரண்டிற்கும் இக்காலத்தில் எல்லா விபரீதங்களைக் காட்டினும் பெரிய பீடையாக விருந்துவந்த ஷரீபின் ஆக்ஷியானது அதன் கடைசி வாழ்கையிலுங் கூட அநியாயம், எதேச்சாதிகாரம் ஆகிய துர்க்கிருத்தியத்தை விட் டொழித்திருக்கவில்லை. மதீனமாநகரின் ஆயிரக்கணக்கான ஜனங் கள் அன்ன ஆகாரமின்மையின் கஷ்ட நிஷ்டூரத்தை முன்னிட்டு அப்

புனித நாட்டிலிருந்து வெளியேறி விட்டனர். அவர்கள் இன்று ஹிஜாஸின் கடற்கரைகளில் ஆதரவின்றி இல்லம் இருங் காலங்கழிக்கின்றனர்.

மனதைப் புண்படுத்தும் இத்துக்க சம்பவத்தை யொட்டிய வரலாற்றை நம் ஹிஜாஸ் தூதுவக்கூட்டம் குறிப்பாய் இந்திய முஸ்லிம்களுக்கறிவித்திருக்கின்றது. ஹிஜாஸ்வாசிகளின் ஜீவனம் ஹஜ்ஜை நிரைவேற்றும் காலத்தில் அங்கு ஜனத்திரள் பெருகுவதைப் பொருத்து நிற்கின்றது. ஹஜ்ஜுக்குச் செல்லும் ஹாஜிகளின் எண்ணிக்கைக்கேற்ப ஹிஜாஸ்வாசிகளின் முழுவருடத்துப் பொருளாதாரநிலை மெச்சத்தக்கதாக விருக்கும். ஆகவே இவ்வருடம் அதிக ஜனங்கள் ஹஜ்ஜுக்குச் செல்லும்படி கிலாபத் கமிட்டிகளின் மூலமாய் முயற்சிப்பதில் உங்கள் கவனத்தைச் செலுத்தவேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

நம்பிக்கைக்குரிய பிரகாசம்.

கனவான்களே! விசனத்தை மூட்டிக்கொண்டிருக்கும் இத்தகைய இருள் சூழ்ந்திருக்கின்ற நாளில் நம்பிக்கையை அளிக்கக்கூடிய ஒளியும் விசேஷமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கவில்லையா? இப்பிரகாசமானது அதனுள் எத்தகைய ஜயத்தை வைத்திருக்கிறதென்று எவரேனும் அளவிட்டுக்கூற முடியுமா?

மராக்கோ.

வட ஆப்ரிகாவில் அமீர்முஹம்மத்இப்னு அப்துல்கரீம் அவர்கள் அடைந்துவரும் ஜெயமானது, பிறப்புரிமை சுயேச்சை ஆகியவைகளைச் சார்ந்த அற்புதங்களுள் ஒருநவீன அற்புதமல்லவா? அமீர் அவர்களை எதிர்த்து ஸ்பெயினிய சைன்னியங்கள் பன்முறை போர் புரிந்தும் ஸ்பெயினின் சக்தி உபயோகமற்றதென்று ஏற்பட்டபின்னர் பிரான்ஸும், ஸ்பெயினும் சேர்ந்து முழுபலத்தோடு அமீர் அவர்களை எதிர்த்துப் போர்புரிந்து கொண்டிருப்பதை உலகம் நன்கறியும். போதிய தளவாடங்களும், நவீன யுத்தக்கருவிகளும், உணவுப்பொருள்களும், விசேஷ சக்தியுமில்லாத சொற்ப "ரீபியர்" களைவைத்துக்கொண்டு அமீர் அப்துல் கரீம் இரத்தவெறி பிடித்த மேல்நாட்டின் இருபெரிய அரசாங்கங்களோடு போர்புரிந்து ஜயமடைவது ஓர் ஆச்சரியமான காக்ஷியேயாகும். மேலும்அவ்விரு அரசாங்கங்களும் "ரீபியர்"களின் பூமியில் இதுவரை ஒருசாண் இடத்தையேனும் வசப்படுத்த முடியாதிருக்கும் வரலாற்றை யொட்டிய செய்திகள் வந்துகொண்டேயிருக்கின்றன. அதிசீக்கிரத்தில் இந்த யுத்தமானது சந்

தியம், அசத்தியம் ஆகியவைகளுக்கேற்ற இறுதியான முடிவை யளித்து விடுமென்பதிலையமில்லை.

ஷாம்

இவ்வாறே 'ஷாம்' தேசத்தின் வீரஞ் செறிந்தவர்களான 'தரூஸி'கள் தங்கள் தேசவிடுதலையைக் கோரிச்செய்யும் மகத்தான போராட்டமானது கீர்த்தியும் சிறப்புமுள்ளதாயிருப்பதோடு மிக்க நம்பிக்கையையும் அளித்து வருகிறதல்லவா? பராக்கிரமமுள்ள தரூஸியர்களின் கிளர்ச்சியானது முதன் முறையாக "ஹூரான்" என்னும் மலைப்பிரதேசத்தில்தான் ஆரம்பமாயிற்று. ஆனால் தமஷ்கஸில் பிரான்ஸியர் இழைத்த பயங்கரமான அநியாயமானது ஷாம் தேசத்தைச் சார்ந்த எல்லா ஜாதியினர்களையும் தரூஸியரோடு ஐக்கியப்படுத்தி விட்டதால், நீர்வள நிலவளங்களால் சிறப்புற்ற "கௌத்தா" என்னும் பாகமுதல் ஜனசஞ்சாரமற்ற "ஹூரான்" மலைப்பிரதேசத்தின் பள்ளத்தாக்குவரை "சுயேச்சை அல்லது மரண"மென்னும் ஓசை வானத்தை அளாவிநிற்கிறது. 'தரூஸியர்'களின் இன்றைய கிளர்ச்சியானது வருங்காலத்தில் செய்யவிருக்கும் முடிவு இன்னவென்பதை நிச்சயித்து இவ்வமயம் கூறமுடியாமலிருப்பினும் தரூஸியர் சுயேச்சை யடைவதற்கான வழிச்செல்ல ஆரம்பித்து விட்டனரென்பதில் ஐயமுண்டா? இவர்களின் லக்ஷியம் கைகூடத் தாமதமேற்படினும் சந்தேகமின்றி இவர்கள் ஆரம்பித்திருக்கும் காரியம் முடிவை யெய்தாதிருக்க நியாயமுண்டா? மேலும் சுயேச்சைப் போர்நடத்தி இன்று களைத்துநிற்கும் இந்திய ஆத்மாவானது "தரூஸிய"ரின் ஜயத்தை அதி ஆவலோடு எதிர் பார்த்தவண்ணமாக விருக்கிறது.

ஈரான்.

"காச்சாரியா" வென்னும் குடும்பத்திலிருந்து வந்த ஏதேச்சாதிகார ஆக்ஷி ஒழிந்துபோயிற்று. இச்சம்பவம் ஈரானின் புதிய மாறுதலில் முக்கியமானதாகும். இவ்வாட்சி ஒழிந்ததை யொட்டிக் கீழ்நாடு முழுவதும் சந்தோஷமுறு மென்பது திண்ணம்.

இன்று அழிந்துபோன 'காச்சாரியா' ஆக்ஷியானது இவ்வாட்சிக்கு முன் ஈரானில் நீண்டகாலமாக இருந்து வந்த கொடிய ஆக்ஷிகள் ஜனித்ததாகும். ஆதலின் இவ்வாக்ஷியிலும் ஏதேச்சாதிகார ஆக்ஷிக்குரிய விஷமத் தீக்கள்யாவும் சம்பந்தப்பட்டிருந்தன. ஆகவே இக்கொடிய ஆட்சி முழு ஈரானிலும் புரிந்துவந்த அநியாயங்கள் சரித்திரங்களில் ஓய்வின்றி வரையப் பெற்றிருக்கின்றன. இவ்வநியாயங்கள்

கூடியவரை சீக்கிரத்தில் ஒழிந்திருக்குமாயின் நன்மையாக இருந்திருக்கும். ஆனால் இவ்வநியாயம் அகன்று நன்மை நிலவ உலகோர் வெகுகாலம் எதிர்பார்த்து நிற்கவேண்டியதாகவிருந்தது. காச்சாரியா வம்சத்திலிருந்து வந்த ஏதேச் சாதிகார ஆக்ஷி ஒழிந்து மற்றொரு குடும்பம் இவ்வாக்ஷியை அடைந்திருப்பதாகச் செய்தி எட்டியிருப்பதற்கு பதிலாய் அந்நாட்டில் ஒரு ஜன நாயக ஆக்ஷி நிலவியதாக விளம்பரம் செய்யப்பட்டிருக்குமாயின் அது பூரண பெருமையைக் கொண்ட மாறுதலெனக் கூறிக் கொண்டாடலாம்.

காச்சாரிய ஆக்ஷி ஒழிந்தபின் ஈரானில் ஜனநாயக ஆக்ஷி நிலவுமென்று உலகம் எதிர்பார்த்தது நியாயமாக விருந்தும் அவ்வாறு ஏற்படவில்லை. ஆனால் இன்று ஈரானில் பெரும் ஆச்சரியமெய்தத்தக்கதும் பிரஸித்தியுள்ளதுமான ஓர் அத்தியாயம் ஆரம்பமாகி விட்டது. ஈரான் தேயத்துப் பொதுஜன உணர்ச்சிக் கிணங்கிய ஓர் ஆக்ஷி திடரெனத் தோன்றிவிட்டது. எவ்வாறாயினும் இவ்வாக்ஷியின் மூலமாய் ஈரான் முன்னேற்றமடையுமென்பது திண்ணம். பலமும் உறுதியுமுள்ள ஒரு தலைவர் இன்று ஈரானின் ஆக்ஷிக்கு முடி சூட்டப்பட்டிருக்கின்றார். ஆகவே இவ்வாக்ஷியால் ஏற்படவிருக்கும் நற்பயனைச் சரித்திரம் எதிர்பார்த்து நிற்கலாம்.

கனவான்களே!

இவ்வமயம் இறுதியாய் மற்றெல்லா காரியங்களையும்விட பெரியதொரு சம்பவத்தை யொட்டிக் கவனம் செலுத்துவோம். 'ஹிஜாஸ்' என்னும் பரிசுத்தபூமியில் நிகழ்ந்துவந்த மகத்தான மாறுதல் முற்றுபெற்றதே இன்றைய அரியசம்பவமாகும். நஜ்தியப்படை மிக்க அமைதியோடு மதீனமாநகரை யடைந்துவிட்டது. நஜ்தியர் ஜித்தாவைக் கைப்பற்றிக்கொண்டதாக வந்தசெய்தியும் உறுதியாகி இருக்கின்றது. ஹுஸைனின் விஷமங்களை விட்டு இன்று ஹிஜாஸ் விடுதலையடைந்துவிட்டது. சிறப்பும் உயர்வுமுள்ள இம்மகத்தான இஸ்லாம் மத ஊழியத்தை முற்றுப்பெறச்செய்த கியாதியை அல்லாஹு தஆலா ஸுஊதின் சந்ததியிலுதித்த இமாம் அப்துல் அஜீஸ் அவர்களுக்களித்தான். நஜ்தியர் ஹிஜாஸை யடைந்ததன் மூலமாய் உலகோர் அனுபவிக்கக் கருதும் நன்மையைக்காட்டினும் உண்மையில் பல நற்சகுணங்கள்தோன்றிக்கொண்டிருக்கின்றன. மேலும் ஹிஜ்ஜாஸ்மட்டுமின்றி ஜஸீரத்துல் அரப் முழுவதும் ஒரு புதிய நிலையை யடைந்திருக்கிறது. அரேபியாவின் புகழ்பெற்ற ஒருமகான் இன்று நம்முன் தோன்றிவிட்டார். இவர் ஹிஜாஸை யடைந்ததை முன்னிட்டு பல

நன்மைகள் நிலவக் காத்திருக்கின்றன. ஹிஜாஸ்யென்னும் புனித பூமி யைச் சீர்திருத்தி நன்னிலைப்படுத்த வேண்டுமென்று முஸ்லிம் உலகம் பல நூற்றாண்டுகளாய்க் கண்டுகொண்டிருந்த கனவிற்கேற்ப நன்மை யெய்தக்கருதி வேலைசெய்ய இன்று முஸ்லிம்களுக்குச் சந்தர்ப்பமேற் பட்டிருக்கிறது. முஸ்லிம் உலகத்தின் பொதுஜன அபிப்ராயமானது இம்மகத்தான மாறுதலை யுணர்ந்து வேலைசெய்யாமல் பின்வாங்கு மாயின் முஸ்லிம் உலகின்மீது சரித்திரம் ஓர் அருங்காலத்தை வியர்த்தமாக்கிய குற்றத்தைச் சாட்டுமென்பது திண்ணம்.

கிலாபத் கமிட்டிகள் இருந்து வரவேண்டிய தவசியமல்லவா?

இந்தியாவின் இன்றைய முஸ்லிம் சமூகக்கூட்டுறவு வாழ்க்கைக் குரிய நன்மையை முன்னிட்டு கிலாபத் கமிட்டிகள் இருந்துவரவேண் டிய தவசியமல்லவா? என்பதையும் நாம் யோஜிக்கவேண்டியவர்களாக விருக்கின்றோம். நம் சமூகத்தின் பற்பல இனங்களில் தோன்றி யிருக்கின்ற நற்சக்திகளைப் பாதுகாப்பதற்குங்கூட கிலாபத் கமிட்டி கள் இருந்துவரத்தான் வேண்டுமென்பது என் அபிப்பிராயமாகும். இந்தியாவில் ராஜீய காரியங்கள் ஆரம்பமானபோது அதில் முஸ்லிம் கள் கலந்து கொள்ளவில்லை. ஐம்பது வருடம்வரை ராஜீய காரியங்க ளினின்றும் முஸ்லிம்கள் விலகி யிருந்தனர். மஹாயுத்தத்தி ற்குப் பிறகு இந்தியாவில் ஹிந்து முஸ்லிம் ஐக்கியக்கிளர்ச்சி ஆரம் பமாயிற்று. கிலாபத்தியக்கத்தோடு முஸ்லிம்களின் மதவுணர்ச்சியும் தோன்றிற்று. வருங்காலவாழ்க்கைக்கு இன்றியமையாத முஸ்லிம் சமூ கக்கூட்டுறவுச் சக்தியைக் குலைக்கத்தக்க எக்காரியத்தையும் செய்யலா காது. இம்மகத்தான சக்தியைப் பாதுகாப்பதற்கு வானத்தின் கீழ் கிலாபத்கமிட்டியைத் தவிர வேறு ஸ்தாபனம் இருப்பதாய்க் கூறமுடி யாது. மேலும் கிலாபத் கமிட்டிகளை எடுத்துவிடப்படுமாயின் முஸ் லிம்களுள் வேற்றுமை வியாபித்து விடும். ஆனது பற்றியே கிலாபத் கமிட்டிகள் இருந்து வரவேண்டியது அவசியமெனக் கருதுகிறேன். இன்றேல் இக்கமிட்டியின் போர்டை நானே எரித்துச் சாம்பலாக்கி யிருப்பேன். ஒழுங்கு முறைக்கேற்ப நிலவப்பட்ட இவ்விஸ்தாபனம் இந் திய முஸ்லிம்களிடமிருந்து வருகிறது. நாம் செய்யவிருக்கும் காரியங் களடங்கிய நிர்மான திட்டத்தைப் பூர்த்தி செய்விக்க இக்கமிட்டியி னாலேயே சாத்தியமாகும். முஸ்லிம்கள் சிதருண்டு போகாமல் தடுத்து ஐக்கியப்படுத்தத்தக்கச் சக்தி கிலாபத்கமிட்டியைத்தவிர வேறு ஸ்தா பனங்களுக்குமிருப்பதாய்க் கூறின் அந்த ஸ்தாபனம் யாது?

ஹிஜாஸின் ஆக்ஷி.

முக்கியமான விஷயங்களை விவாதித்துப் பரிசீலனை செய்து தீர்மானிக்க வேண்டியது அவசியமே. கிலாபத் கமிட்டியையும் அதன் நடவடிக்கைகளையுமெதிர்த்துச் செய்யப்பட்ட காரியங்கள் பலஉருவங்களைக்கொண்டனவாக விருந்தன. நிகழத்தகாத சிலகாரியங்கள் ஹிஜாஸில் நிகழ்ந்து விட்டதை யொட்டி நாமெல்லோரும் வருந்துகிறோம். இவை நிகழ்ந்ததற்கான காரணங்களையும் சந்தேகமின்றி நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். யுத்தகாலங்களில் மூர்க்கத்தனமாய்ப் பற்பல விபரீத துற்செய்கைகள் நிகழ்ந்து விடுவது சகஜமாக விருப்பதுபோலவே ஹிஜாஸிலும் விசாலநோக்கமற்ற நஜ்தியச் சைன்னியத்தைச்சார்ந்த சிலர் விரும்பத்தகாத இக்காரியங்களைப் புரிந்து விட்டனரென்ப துண்மையே. இவ்விரும்பத் தகாத காரியங்கள் ஹிஜாஸில் நிகழ்ந்து விட்டதை முன்னிட்டு மத்திய கிலாபத் கமிட்டி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் ஒருசாராரின் மதக்கொள்கையையாவது ஒரு கட்சியின் குறுகிய நோக்கத்தையாவது கொண்டனவல்ல. கிலாபத் கமிட்டி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் உண்மையில் சமய சந்தர்ப்பத்தை யுணர்ந்த ஐக்கியமான முறையை அடிப்படையாய்க் கொண்டனவாகும். மத்திய கிலாபத் கமிட்டியானது நியாயமான வழியைப் பின்பற்றி ஒழுங்கான முறையில் இடைவிடாது சதாவேலை செய்துவந்தது. உண்மை இவ்வாறிருக்க ஹிஜாஸில் நிகழ்ந்த உசிதமற்ற காரியங்களை யொட்டி நம் நாட்டில் பல பொருத்தமில்லாத விவாதங்கள் தோன்றியதற்காக நாம் வருந்தவேண்டும். மேலும் ஏற்கமுடியாத முறையில் விஷயங்களை மிகைப்படுத்தி விதண்டாவாதம் புரியப்பட்டுவந்தது. சரித்திர பூர்வமான ஞாபகச் சின்னங்களும் மகான்களின் சமாதிகளும் தகர்க்கப்பட்டு விட்டனவென்றும்,மதீனமாநகருக்கு வெளியே சில பெரியாரின் சமாதிகளும் கோரிகளும்இடிக்கப்பட்டு விட்டனவென்றும்,பீரங்கிப் பிரயோகத்தின் காரணமாய் நாயகம் ரஸூலுல்லாஹிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ரௌலாஷரீப் தகர்ந்து விட்டதென்றும் அல்லது அதில் சிலபாகம் இடிந்து விட்டதென்றும் பல விதண்டாவாதங்கள் தோன்றின. ஆனால் இவையெல்லாம் உண்மையானவைகளென்று உறுதிசெய்யப்பட்டதா? மதீனமா நகரில் ரௌலாஷரீப் தகர்க்கப்பட்டதாய் இட்டுக்கட்டி வெளிவந்த செய்தி பொய் என்பது வெளுத்துப் போயிற்று. மேலும் மற்ற ஞாபகச் சின்னங்கள் சமாதிகள் முதலியன தகர்க்கப்பட்டதை யொட்டி மத்திய கிலாபத் கமிட்டியானது

வெளியிட்ட செய்திகள் விஷமத்தையும் விபரீதத்தையும் ஒழிக்கத் தக்கனவாகவே இருந்தனவென்பது திண்ணம். சமாதானம், அமைதி, உறுதி ஆகியவைகளை விரும்பக்கூடிய எவரும் கிலாபத் கமிட்டியின் இந்நடவடிக்கையை ஏற்றுக்கொள்ளாமலிருக்க முடியாது. ஹிஜாஸின் எப்பாகத்திலேனுமுள்ள எக்கட்டிடத்தையும் ஒரு சாராரின் மதக்கொள்கையின் காரணமாய் இடித்துவிட கிலாபத் கமிட்டி சம்மதிக்கவேயில்லையென்பது வெளிப்படை. கிலாபத்கமிட்டியானது ஹிஜாஸில் நிகழ்ந்துவிட்ட விரும்பத் தகாதவைகளை யொட்டி ஹிஜாஸுக்கு அடிக்கடிஅனுப்பிய செய்திகளுக்குஹிஜாஸிலிருந்து கிடைத்திருக்கும் விடைகளில், மூர்க்கத்தனமான வகுப்பைச்சார்ந்த "சிலர் அடக்கமற்றவர்களாய் அவ்விபரீதங்களை நிகழ்த்தி விட்டார்களென்றும், அவ்வமயம் சுல்தான் இப்னுஸஊத் அவர்கள் மக்கமாநகரிலிருக்கவில்லை யென்றும், சுல்தான் அவர்கள் இவ்விரும்பத் தகாதச்செய்தியை அறிந்து வருந்தியதாயும் வரையப்பட்டிருப்பதோடு சுல்தான் இப்னுஸஊத் அவர்கள் எழுதிய கடிதத்திலும் தம்துக்கத்தைத் தெளிவாய் வெளியிட்டிருக்கின்றார்கள். மேலும், பாட்னாவில் நடைபெற்ற கிலாபத்கமிட்டியின் கூட்டத்தில் சில நஜ்தியர் விளைத்த கேட்டை யொட்டிக் கண்டனத்தீர்மானம் செய்யப்படவில்லையா? கிலாபத் கமிட்டிக்கு ஹிஜாஸிலிருந்து வந்த செய்திகள்யாவும் நம்பத்தகாதனவென்று வைத்துக்கொண்டாலும் சுல்தான் இப்னுஸஊத்அவர்கள் ஈரான் கவர்மெண்டுக்கு ஈரான்தேச ஸ்தானீகரிடம் கொடுத்தனுப்பியகடிதத்தில் வரையப்பட்டிருப்பதையாவது நம்பவேண்டாமா?

சுல்தான் இப்னுஸஊத் அவர்களின் கடிதம்.

மதீனமாநகரின்மீது குண்டுப்பிரயோகம் செய்யப்பட்டதாய் ஈரானுக்குச் செய்தி எட்டியதும் ஈரான்கவர்மெண்டு, ஹிஜாஸையடைந்து அங்கு நிகழ்ந்துள்ளவைகளை விசாரித்து வருவதற்காக 'ஜலாலுஸ்ஸல்தனத்' அவர்கள் தலைமையின்கீழ் ஒரு தூதுவக் கோஷ்டியை அனுப்பிற்று. இத்தூதுவக் கோஷ்டியானது சிறப்புற்ற மக்கா, மதீனமாநகரம் முதலியவைகளை யடைந்து தகர்க்கப்பட்டுவிட்டதாய்ச் செய்தி யெட்டிய கட்டிடங்களைப் பார்வையிட்டது. பிறகு அமீர் அலியையும் சந்தித்துவிட்டு எகிப்துக்குப்போய் மீண்டும் ஈரானை யடைந்து இத்தூதுவக் கோஷ்டியானது ஒரு ரிப்போர்ட்டை வெளியிட்டிருக்கிறது. சுல்தான் இப்னுஸஊத் அவர்கள் ஸர்தார் ரஜாகான், காபல்அமீர் ஆகியவர்களுக்கு அனுப்பிய கடிதத்தின் சாரத்தையும் அந்த ரிப்போர்ட்டில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

கடிதத்தின் சாரமாவது:—

"என்மார்க்க அறிவு என்மத ஆராய்ச்சி ஆகியவைகளைப் பொருத்த வரையில் சிலவிடங்களையும் கட்டிடங்களையும் இன்றுசிலர் ஆராதனைச் செய்வதைப்போல் ஆராதனை செய்யவேண்டுமென்னும் கொள்கையை நான் கொண்டிருக்கவில்லை என்பதைத் தெளிவாய்க்கூறிவிட விரும்புகிறேன். கொள்கையின் பேதத்தை முன்னிட்டு எவரோடும் போர்புரிய நான் விரும்பவில்லை. இஸ்லாம் உலகத்தின் உலமாக்கள், தகர்க்கப்பட்டுப்போன கட்டிடங்களை மீண்டும் கட்டிவிடவேண்டுமென்று அறிவிப்பார்களாயின் அவ்வாறே கட்டிமுடிப்பதற்குத்தயாராயிருக்கின்றேன். அல்லது முஸ்லிம்களுள் ஒருவகுப்பார் அவ்வேலையைச்செய்ய முற்படின் என்னால் கூடியவரைச் சகாயம் செய்யவும் காத்திருக்கின்றேன்" என்பதே.

இத்தெளிவான பதங்களின் மூலமாய் சுல்தான் இப்னுஸூஊத் அவர்கள் உண்மையை விளக்கிக்காட்டிவிட்ட பின்னும் நம்மவர் விவாதித்துக்கொண்டிருக்கவேண்டியதேனோ? நம் கிலாபத்கமிட்டியின் தூதுவக்கோஷ்டியானது பிரஸ்தாப விஷயமாய் சுல்தான் இப்னுஸூஊத் அவர்களிடம் பேசியபோது சுல்தான் அவர்கள் "சிற்சில விரும்பத்தகாத காரியங்கள் நடந்துவிட்டதுண்மையே; ஆனால் இது எதிர்பாராமல் திடீரென ஏற்பட்ட சம்பவமாகும். இதைக்காட்டினும் அதிகொரமான விபரீதச்செய்கைகளை விளைவிக்கின்ற நாகரீகம் முதிர்ந்ததேசங்கள் "யுத்த சமயத்தில் இவ்வாறு நடைபெற்றுவிடுவது சகஜம்" என்று கூறிவிடுவதில்லையா? நாங்கள் இதுவரை போதியளவு நவீன யுத்தக்கருவிகளைப் பெற்றிருக்கவில்லை" என்று கூறியிருக்கின்றார்கள்.

மகான்களின் சமாதிகளுக்குரிய மரியாதையை முன்னிட்டு கோரிகள் இருந்துவரவேண்டுமென்னும் கொள்கையை நஜ்தியர் கொண்டிருக்கவில்லை. ஆனால் நீங்கள் சமாதிகளுக்குக் கோரிகள் கட்டாயமாகஇருந்துவரவேண்டுமெனக் கருதுகின்றீர்கள். அவரவரின் கொள்கையானது அவரவரைச் சார்ந்ததாகும். சுல்தான்இப்னுஸூஊத் அவர்கள் ஹிஜாஸில் நிகழ்ந்துவிட்ட விசனகரமான காரியங்கள் நிகழ்ந்ததற்குரிய காரணங்களை யெடுத்துக்காட்டி இதற்காக வருந்துவதோடு மீண்டும் கட்டிவிடத் தயாராகவிருப்பதாயும் வாக்குறுதி செய்கின்றார்கள். இந்நிலையில் அரேபியாவைச் சுத்தப்படுத்துவதும் ஜஸீரத்துல் அரபை மீட்பதுமான பெரும்காரியங்களை, அவசியமற்றவைகளை முன்னிட்டு, நிறுத்திவைக்கமுடியுமா?

ஹிஜாஸில் ஏற்படவிருக்கும் ஜனநாயக ஆக்ஷி.

சுல்தான் இப்னுஸுஊத் அவர்கள் ஹிஜாஸை தங்களின் ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ளக் கருதுவதாக எச்சந்தர்ப்பத்திலும் கூறவில்லை. ஆனால் "ஷரீபின் ஆக்ஷியானது அரேபியாவுக்கே ஓர் பெரும் தொந்தரையாக விருந்ததால் நானொரு முஸ்லிமாயும் அரப்வாசியாயுமிருப்பதைமுன்னிட்டு அவ்வாக்ஷியை வெளியேற்றிவிட்டேன். "என்காலம் முடிந்துவிட்ட"தென்று இஸ்லாம் உலகத்தின் உண்மையான பிரதிநிதிகள் எனக்கறிவிக்கும்அன்றே நான் ஹிஜாஸைவிட்டுச் சென்றுவிடுவேன். ஹிஜாஸ், ஹிஜாஸ்வாசிகளுக்கே உரித்தானதாகும். மேலும்ஹரமைனுஷ்ஷரீபைனைப் பரிசுத்தப்படுத்தவேண்டிய காரியத்தில் முஸ்லிம்உலகம் சம்பந்தப்பட்டு, அதற்குரிய ஜனநாயக ஆக்ஷியை ஏற்படுத்திக்கொள்ளட்டும் என்று சுல்தான் இப்னுஸுஊத் அவர்கள் பன்முறைகூறி யிருக்கின்றார்கள்.

சுல்தான்இப்னுஸுஊத் அவர்கள்ஹிஜாஸில் ஜனநாயக ஆக்ஷியை ஏற்படுத்தவேண்டுமென்று கூறியதானது பிரான்ஸ், அல்லது அமெரிக்காவிலிருந்துவரும் ஜனநாயக ஆக்ஷியைப் போன்றதாக விருக்குமெனக்கருதமுடியாது. ஹிஜாஸின் இன்றைய உணர்ச்சியும், அறிவும் இத்தகைய ஆக்ஷியை ஏற்றுக்கொள்ள வியலுமா? ஹிஜாஸில் ஜனநாயகஆக்ஷி நிலவவேண்டுமென்று கிலாபத் கமிட்டி கூறியதற்கு ஹிஜாஸின் ஆட்சி ஒரு குடும்பம் அல்லது ஒரு சந்ததிக்கே உரியதாகவிருக்கக்கூடாதென்பதே அர்த்தமாகும். ஹிஜாஸில் ஜனநாயக ஆக்ஷி ஏற்படுதற்குவேண்டிய உணர்ச்சியும் அறிவும் அதிதுரிதமாய் அபிவிர்த்தியடைந்து விடலாம்.

முஸ்லிம் உலகமகாநாடு.

1926ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் காரியங்களுள் முஸ்லிம் உலகமகாநாடு ஓர் அரிய மகத்தான கூட்டம் என்பது திண்ணம். இக்காரியம் நடைபெறமுடியாமல்தடுத்துக்கொண்டிருந்த இடையூறுகளும் சாமானியமானவையல்ல. ஆனால் ஷரீப்ஹுஸைன், அமீர்அலி ஆகியவர்களின் ஆக்ஷி ஹிஜாஸை விட்டு இன்று ஒழிந்து போனதால் அங்கு இம்மகாநாட்டை நடத்திவைப்பதற்குவேண்டிய சௌகரியங்கள் கிட்டியிருக்கின்றன. ஆகவே சுல்தான் இப்னுஸுஊத் அவர்கள் அம்மகாநாட்டிற்கு உலகமுஸ்லிம்களின் பிரதிநிதிகள் வரவேண்டுமெனக் கோரி அழைப்புப்பத்திரங்களனுப்பி யிருக்கின்றார்கள். மேலும் குறிப்பாய் நீங்களும் அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள். அம்மகாநாட்டிற்குப் பிரதிநிதிகளை யனுப்பமுடியாத இஸ்லாமிய நாடேகிடையாது. ஆகவே

அம்மகாநாட்டை நடத்திவைப்பதற்கான வேலைகளைச் செய்வதற்கு மத்திய கிலாபத்கமிட்டி முற்பட்டுவிடவேண்டும். இவ்வருட ஹஜ் ஜுக்காலத்திலாவது அல்லதுமறுவருடத்தில் குறிப்பிட்ட ஒருமாதத் திலாவது அம்மகா நாட்டை நடத்திவைக்கலாம். இம்மகாநாட்டிற்கு வேண்டிய அவசியமான முன்னேற்பாடுகளை இன்றே தயாரித்துவிட வேண்டும். ஹிஜாஸுக்கு நமது தூதுவக்கோஷ்டிகளை அனுப்புவது, அத்தூதுவக்கோஷ்டி ஹிஜாஸிலேயே தங்கியிருப்பது ஆகியவை கள்மட்டும் போதாது. மற்ற இஸ்லாமிய தேசங்களுக்குப் பிரதி நிதிகளையனுப்புவது, அம்மகாநாடு நடைபெறுவதற்குரிய பிரசாரங் களைச் செய்வது முதலியகாரியங்களையும் மத்திய கிலாபத்கமிட்டிபொ றுப்பேற்றுச் செய்ய வேண்டிய திருக்கலாம். ஆதலின் அவைகளை யோசித்து உடனே வேலையை ஆரம்பித்துவிட வேண்டும்.

மத்திய கிலாபத்கமிட்டியின் நிர்மாணத்திட்டமும் அதன் ஒழுங்கு முறையும்.

கனவான்களே! இச்சந்தர்ப்பத்தில் செய்யவிருக்கும் முக்கிய மான காரியங்களில் உங்கள் கவனத்தைச் செலுத்தும்படி நான் கோரு வதற்குமுன் இன்றைய நம்வேலைகளைப் பொறுத்தவரை கிலாபத் கமிட்டியின் நிலையென்ன வென்பதைப் பற்றிச் சிலவார்த்தைகள் கூற விரும்புகிறேன். நான் எடுத்துக் காட்ட விரும்பும் இக்காரியம் மிகத் தெளிவான எண்ணத்தையும் அபிப்பிராயத்தையும் பெறவேண்டிய தவசியமென்பதையும் நான் அறிவேன்.

கிலாபத்கமிட்டி ஆரம்பமானபோது அதன் லக்ஷியம் இரண்டா கும். (1) கிலாபத் பிரச்னையை முன்னிட்டு தேசமுழுவதிலும் ஸ்திர மான கிளர்ச்சியை நடத்திவைப்பது. (2) தேசவிடுதலையை யொட்டிய உணர்ச்சியைக் குறிப்பாய் முஸ்லிம்களிடையே யுண்டுபண்ணுவது.

முஸ்லிம்கள் ராஜீயப் போராட்டத்தில் பின்னடைந்திருந் தார்களாதலின், கிலாபத்கமிட்டி இவ்விரண்டாவது லக்ஷியத்தையும் தன்னுள் கொள்ளவேண்டியதவசியமாயிற்று. ஆனது பற்றியே முஸ் லிம்களுக்குத் தேசிய உணர்ச்சியை விருத்தி செய்யக்கருதி சிலர் சதா வேலை செய்யவேண்டியதாக விருந்ததும் உண்மையே. ஆனால் இன்று கிலாபத்பிரச்னையைப் பொருத்தவரைச் செய்யவேண்டியவேலை எதுவு மில்லை யென்றும் மத்திய கிலாபத் கமிட்டியொன்றே இந்திய முஸ் லிம்களைப் பொறுத்து நிற்கும் காரியங்களைப்புரிந்து வரலாமென்றும் "தேசவிடுதலையை யொட்டிய உணர்ச்சியை முஸ்லிம்களிடையுண்டு பண்ணுவது" என்னும் இரண்டாவது லட்சியத்தை முன்னிட்டு ஒவ்

வொருமாகாணங்கள் ஜில்லாக்கள் தோறும் கிலாபத்கமிட்டியின் பெயரால் ஒவ்வொரு ஸ்தாபனங்கள் இருந்து வரவேண்டுமென்னும் அவசியமில்லை யென்றும் சிலர் கூறுகின்றனர். மற்றுஞ்சிலர் தேசத்தின் இன்றைய சோர்வையும் இந்து முஸ்லிம் சச்சரவுகளையும் கண்டு மனம் கலங்கித் தங்களின் மேலான லட்சியத்தை யடைவதற்குரிய வழியில் முன் சென்று கொண்டிருக்கத்தக்க விசால அறிவையிழந்துவிட்டனர். மேலும் இத்தகைய முஸ்லிம்கள் கிலாபத் கமிட்டிகளை விட்டு விலகி புதிய சபைகளை ஸ்தாபித்து அல்லது பழையசபைகளைப் புதுப்பித்துக் கொண்டேனும் காலத்திற்கேற்றவேலையை ஆரம்பிக்கலாமென்று கருதுகின்றனர். வேறுசிலர் தேசத்தின் அயர்வு ஹிந்துமுஸ்லிம் சச்சரவு ஆகியவைகளைக் கண்டு மனம் கலங்கி விடாமலும், தங்களின் லட்சியம்,கொள்கைஆகியவைகளை யிழந்துவிட இஷ்டப்படாமலும் கிலாபத்தியக்கத்தைச் சார்ந்த இரண்டாவது லட்சியத்தைமறுக்காமலுமிருப்பதோடு கிலாபத் கமிட்டிகள் செய்யவேண்டிய வேலைகளெதுவும் இல்லாதிருக்கின்ற நிலைமையில் இக்கமிட்டிகளை வைத்திருக்கவேண்டிய அவசியமென்னவென்று வினவுகின்றனர்.

கனவான்களே! தேசநிலைபைக்கண்டு மனம்கலங்கி நம்பிக்கையிழந்து நிற்போரின் கூற்றை நான் ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆனால் மற்றவர்களின் அபிப்பிராயத்தை ஓரளவு ஏற்றுக்கொள்ளுவேன். நம் நாட்டிற்குவெளியே இஸ்லாம் சம்பந்தமாய்ச் செய்யவிருக்கும் காரியங்களை மத்தியகிலாபத் கமிட்டிமட்டும் நடத்திக்கொள்ளக் கூடுமென்னும் நிலைமை இன்று ஏற்பட்டிருப்ப துண்மையே. ஆனால் நாட்டின் ராஜீயசம்பந்தமான காரியங்களிலிருந்து முஸ்லிம்கள் விலகி நிற்கவேண்டு மென்னும் கூற்றை நான் பலமாய் மறுக்கின்றேன். கிலாபத்கமிட்டி என்னும் பெயரைக் கொண்டிருக்கும் ஸ்தாபனங்கள நம் நாட்டிலில்லாது போயின் முஸ்லிம்கள் சமூகநன்மையை யொட்டிய காரியங்களைச் செய்யமுற்படுவதற்குப் பதிலாய் பிற்போக்கடைந்து விடுவார்களென்பது திண்ணம். மேலும் விசால நோக்கத்தோடு நாட்டின் உண்மை நிலையை யுற்றுநோக்குவோமாயின், கிலாபத்தியக்கத்தைச்சார்ந்த கிளர்ச்சியானது முஸ்லிம்களின் கொள்கையிலும் செய்கையிலும் உண்டுபண்ணிய நல்லுணர்ச்சியானது ஒருகாலம் வரை நம் நாட்டைவிட்டொழிந்துபோகுமென்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டுமல்லவா?

முஸ்லிம்கள் தங்களின் லஷியத்தை யடையும் பொருட்டுவேலை செய்துவரும் ஸ்தாபனத்தை கிலாபத்கமிட்டி என்னும் பெயரைக்

கொண்டு மட்டும் நோக்குவது விவேகமல்ல. கிலாபத் கமிட்டியின் ஆலயத்திற்கு வெளியே தொங்கவிடப்படும் பலகையில் எழுதுவதற் காகவே அப்பெயரை உபயோகிக்கப்பட்டு வருவதாய் வைத்துக் கொண்டாலென்ன? முஸ்லிம்களின் செய்கையிலும் கொள்கையிலும் மேற்பட்ட மாறுதல் காரணமாய் முஸ்லிம்களுள் ஜனனமான பிர த்தியேக சக்தி, உறுதி ஆகியவைகளைப் பாதுகாக்கும் கூட்டம் கிலா பத் கமிட்டி என்றழைக்கப் படுவது குற்றமா? இக்கூட்டமானது 1912 வது ஆண்டுமுதல் 1920 வது ஆண்டுவரை முஸ்லிம்களுள் தோன்றிவந்த உணர்ச்சியை முன்னிட்டு இந்திய முஸ்லிம் சமூக வாழ்க்கையின் சங்கிலியில் ஒரு புதியவளையத்தை யுண்டு பண்ணி யிருப்பதை யறியாதாருண்டா? இவ்வளையம் எடுபட்டுப்போ மாயின் முஸ்லிம்கள் ராஜீய வாழ்க்கையை யொட்டி யடைந்த எல்லைகளுள் முக்கியமான தொன்றையிழந்து விட நேரும். இந் தியாவின் விடுதலையை யொட்டிய ஊழியத்தைப் பொருத்தவரை கிலாபத் கமிட்டி என்னும் பெயரைக் கொண்டிருக்கும் இக்கூட்ட மானது மற்ற ஸ்தாபனங்கள் அடைந்திராத ஓர் பெரும் அந்தஸ் தைப் பெற்றிருக்கின்றது. இந்தியரின் சுயேச்சை, நாட்டின் விடுதலை ஆகியவைகள் கிட்டுமென்ற நம்பிக்கையோடு ஓர் ஐக்கியக் கிளர்ச் சியை யுண்டுபண்ணிய பெருமை இக்கூட்டத்திற்கே உரித்தாகும். நம் துர்அதிர்ஷ்டமானது இந் நம்பிக்கையைக் கெடுக்கக்கூடிய எத்த கைய இடையூறுகளை விளைத்திருப்பினும் கிலாபத் கமிட்டி என்னும் பெயரைப் பூண்டிருக்கும் ஸ்தாபனங்களை இழந்துவிடமுடியாது. முஸ்லிம் சமூகத்தின் நன்மை, உரிமை ஆகியவைகளைப் பாதுகாக்க வேண்டிய தவசியமென்பதையும் கிலாபத்கமிட்டி ஏற்றுக்கொள்ளுகின் றது. ஆனால் ஹிந்து சகோதரர்களின் பொருத்தமற்ற நடவடிக்கை யைமுன்னிட்டு அன்னிய ஆட்சியின் ஆதரவைப் பெறவேண்டுமென் பதை இக்கமிட்டி பலமாய்க் கண்டிக்கின்றது. தேசம் விடுதலையடை யாமல் தடுப்பதற்குரிய கருவியாக இச்சமூகத்தை அன்னியர் சதா கை யாண்டுவர கிலாபத் கமிட்டி சம்மதித்திருக்க முடியுமா? ஹிந்துக்கள் நியாயமாய் நடந்துகொள்ளும்படிச் செய்ய முஸ்லிம்கள் பல்மான முறையைக் கொண்டு வேலைசெய்யலாம். ஆனால் தேசவிடுதலைக் காகச் செய்யும் வேலையைக் கெடுக்கக் கூடிய காரியங்களை விட்டு முஸ்லிம்கள் சதா ஒதுங்கி யிருக்கவேண்டியது அவசிய மல்லவா? ஆரம்பசூரர்க ளாய் பிரயோசனமற்ற வேலைகளைச் செய்வது பெருந்தவறுதலின் இத்தகைய காரியங்களெதுவும் நடைபெறக் கூடாதென்று 1920-வது

ஆண்டில் கிலாபத் கமிட்டியானது இக்கொடிய வாயிலை அடைத்து விட்டதென்பதை ஞாபகமூட்டுகிறேன். எத்தகைய நற்காரியத்தை முன்னிட்டும் வேலைசெய்யவேண்டுமாயின் தியாகமும், உண்மையான உறுதியுமே அவ்வேலைக் கவசியமான ஜீவனென்பதை கிலாபத் கமிட்டி நன்கறியும். சென்றவருடங்களில் நடைபெற்ற கிளர்ச்சியானது நம்நாட்டின் சக்தியைப் பூரணமாய்ப் பரிட்சித்து உண்மையை விளக்கிவிட்டது. நல்வழிச் செல்லும் திறமையுள்ள கால்களெல்லாம் கிலாபத்தியக்கத்தின்போது நடந்துகாண்பித்துவிட்டன. மேலும் எத்தகைய நற்காரியமாயினும் அதை யொட்டி வழிநடக்க முடியாதவர்கள் தங்களின் அசக்தியை வெளியிட்டு விட்டன ரல்லவா? ஆகவே கிலாபத் கமிட்டிஎன்னும் பெயரால் ஆங்காங்கிருந்துவரும் ஸ்தாபனங்களைச்சார்ந்தவர்களே வேலைசெய்யும் திறமையுள்ள வகுப்பு என்பதையறியவேண்டும். கிலாபத்கமிட்டி யுண்டுபண்ணியிருக்கும் சக்தியின் ஆதரவைப்பெறாமல் இன்று நாட்டில் எக்காரியத்தையும் சாதிக்கவியலாது. இச்சக்தியைத் தவிர வேலைசெய்வதற்குரிய வேறுசக்தி நம் நாட்டிலிருக்கின்றதா?

நான் மேற்கூறியவைகளில் அடங்கியிருக்கும் உண்மையையும் என் நோக்கத்தையும் தெரிந்துகொள்ளக் கூடிய அந்தஸ்து உங்களுள் ஒவ்வொருவருக்குமுண்டு. ஆகவே அவ்விஷயங்களை யொட்டி மீண்டும் விரித்துக் கூற அல்லது அதற்குரிய முகாந்திரங்களை யெடுத்துக் காட்டவேண்டிய அவசிய மில்லையெனக் கருதுகிறேன். முஸ்லிம்களுள் நற்கொள்கையையும் ஏற்ற உணர்ச்சியையும் கற்பித்த (கிலாபத் கமிட்டி என்னும்) இப்பாடசாலை இருந்துவரவேண்டியது அவசியமென்று நான் நம்பியிருப்பதுபோல நீங்களும் நம்பத் தயாராகவிருக்கின்றீர்களா? கிலாபத் கமிட்டிகளைக் கலைத்துவிடுவோமாயின் அக்கமிட்டிகளிருந்தவிடம் காலியாகி விடுமென்பது மட்டுமின்றி விசால நோக்கமற்ற நம்பத்தகாத அறிவிலிகளைக் கொண்ட பற்பல கூட்டங்கள் வேலை செய்ய முன்வருமல்லவா? இவ்விடைக்கால ஓட்டில் முஸ்லிம்கள் வேறு நற்காரியங்களைச் செய்ய சாத்தியமற்றிருப்பினும் பின்புறத்தில் மறைவாய் நடைபெற்றுக் கொண்டிருப்பதென்ன வென்றேனும் கவனிக்கவேண்டாமா?

நீங்கள் இந்தியாவில் வாழவேண்டியதும் அவ்வாழ்க்கைக்குரிய காரியங்களைச்செய்யவேண்டியதும் அவசியமா? அல்லவா? வென்பதைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் இதோ தோன்றி இருக்கின்றது. நீங்கள் இந்தியாவில் வாழவேண்டியதும் அவ்வாழ்க்கை

குரிய காரியங்களைச் செய்ய வேண்டியதும் அவசியமெனக்கூறுவீர்க ளாயின் இக்கூற்றை மெய்ப்பிக்கத்தக்கக் காரியங்களைச் செய்யமுற் படமாட்டீர்களா? சென்ற ஐந்து வருடங்களாக இந்தியாவுக்கு வெளி யேயுள்ள இஸ்லாமிய நாடுகள், கீழ்தேசங்கள் ஆகியவைகளைச் சார்ந்த பிரச்னையை முன்னிட்டுக் கிளர்ச்சி செய்தீர்கள். அக்கிளர்ச்சியின் மூலமாய் எத்தகைய பலன் கிட்டக்கூடுமோ அதைப்பெற்றுக் கொண் டீர்கள். ஆனால் இன்றும் நீங்கள் முன்போலவே உங்கள் நாட்டில் சுயேச்சையற்றவர்களாய் அடிமை விலங்கில் கட்டுண்டவர்களாக விருப்பதை யொட்டிச் சிந்திக்கமாட்டீர்களா? உங்களின் இவ் விழிய நிலையானது உங்கள் விடுதலையைக் கெடுப்பதாக மட்டுமின்றி கீழ்நாடு முழுவதையும் பாழ்பண்ணி விடுகிறதல்லவா? ஆகவே உங் கள் சக்தியை உள்நாட்டின் நன்மையை யொட்டிய ஊழியத்திற்கு அர்ப்பணம் செய்துவிடுங்கள். இந்தியாவின் ஓர் பேரங்கமாக விருந்து வரும் முஸ்லிம் சமூகத்தின் கல்வி, பொருளாதாரம், பொது வுணர்ச்சி ஆகியவைகள் முன்னேற்றமெய்தி சீர்திருத்த மடைவதை யொட்டிய ஊழியம் எச்சந்தர்ப்பத்திலும் நாட்டின் நன்மையைச் சார்ந்த ஒரு முக்கியமான காரியமல்லவா? தேசவிடுதலையை யொட் டிச் செய்யவேண்டிய ராஜீயக் காரியங்களெதுவு மில்லாதிருப்பின் அல்லது இன்று செய்யக்கூடிய காரியங்களை அகில இந்திய காங் கிரஸ் ஏற்றுக்கொண்டிருக்குமாயின் முஸ்லிம்கள் வேறு நற்காரி யங்களைச் செய்வதில் தங்களின் காலத்தைச் செலவிடவேண் டும். பொதுஜன அறிவு, வாழ்க்கை ஆகியவைகளின் சீர்திருத் தத்தை முன்னிட்டு நாலைந்து வருடம்வரை வேலைசெய்வதற்குரிய அவகாசம் 1920வது ஆண்டிற்குமுன் நாம் பெற்றிருக்கவில்லை. ஆனதுபற்றியே இவ்வாண்டில் ஆரம்பமானவேலைகள் திடீரெனத் தடையுண்டு இதற்கிடையூறுன விபரீதங்கள்தோன்றி தேசம் அவ நம்பிக்கையில் சிக்குறும்படி நேர்ந்துவிட்டது. ஆகவே இன்று நாம் எத்தகைய நற்காரியத்தையும் செய்யமுடியாதிருக்கலாம். ஆனால் நாம் சென்ற சில ஆண்டுகளில் செய்யவியலாதிருந்த வேலைகளை யேனும் குறைந்தபக்ஷம் வரும்வருடங்களுள் சிலவற்றில் செய்து முடிக்கலாமல்லவா? இவ்வூழியத்தாலேற்படும் ஜெயம் குறைவாக விருப்பினும் இது முஸ்லிம் சமூகத்திற்கு மகத்தானநன்மை பயக்கக் கூடிய ஊழியமென்பது திண்ணம். இக்காரியத்துள் ஓர்பெரும் பாகத் தைஅகிலஇந்திய காங்கிரஸ்கமிட்டி பொறுப்பேற்று எல்லாச்சமூகங்க ளுள்ளும் பொதுவாய் வேலைசெய்யவேண்டுமென்பது என் அபிப்பி

ராயமாகும். ஆனால் காங்கிரஸ் கமிட்டியானது இத்தகைய ஊழியத்தை ஆரம்பிக்க முடியாதிருக்குமாயின் தேசத்தின் ஒவ்வொரு சமூகமும் தங்களினெல்லைக்குள் இவ்வரியவேலையைச் செய்யமுறப்படவேண்டும்.

முஸ்லிம்களின் சீர்திருத்தத்திற்குரிய நிர்மாணத் திட்டத்தையேற்படுத்தி அத்திட்டத்திற் குட்பட்டு முஸ்லிம்கள் வேலைசெய்ய ஆரம்பித்து விடவேண்டும். கிலாபத்கமிட்டி என்னும் ஸ்தாபனங்கள் இத்தகைய ஊழியத்தை நடத்திவைக்க பொறுப்பேற்றுக் கொள்ளுமாயின் இக்கமிட்டி இருந்துவரவேண்டுமா? வேண்டாமா? என்னும் விதண்டாவாதம் தானாகவே ஒழிந்துவிடுமென்பதை யான் நிச்சயமாய்க் கூறுகிறேன்.

“தன்ஸீம்” என்னும் பெயரால் சென்றவருடம் ஒரு நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறீர்களென்பதுண்மையே. அத்திட்டம்உங்கள் ரிகார்டில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றது. அத்திட்டம் அநேக வேலைகளடங்கியதாக விருக்கிறது. ஆனால் அத்திட்டம் உங்களுக்கு நன்மையையளிக்கும் முறையில் வேலை செய்யத்தகுந்ததல்ல வென்று நான் கருதுகிறேன். ஆகவே முஸ்லிம் சமூகத்தைச் சீர்திருத்துவதற்கு இன்றியமையாத முக்கியமான அடிப்படை இன்னவென்பதை முதலாவதாகத் தீர்மானித்துக் கொண்டு பிறகு ஒரு குறிப்பிட்ட சாதாரண முறையைத் தழுவி இலகுவாய் வேலைசெய்ய முறபடவேண்டும்.

1926ல் நிறைவேற்றவேண்டிய நிர்மாணத்திட்டம்.

எல்லா விஷயங்களையும் ஆராய்ச்சி செய்து உற்றுநோக்கிய பின்னர் பொது ஜனங்களுக்கு கல்விஅறிவைப் புகட்டுவதே எச்சந்தர்ப்பத்திலும் நம் முதற்காரியமாக இருக்கவேண்டுமெனக் கருதுகிறேன். மேலும் மற்றெல்லாக் காரியங்களைக்காட்டினும் இக்காரியமே அதிமுக்கியமானதென்று வற்புறுத்துகிறேன். இவ்வரிய காரியத்தையே சதா அலக்ஷியம் செய்யப்பட்டிருக்கின்றது. கல்வி என்னும் பதத்தைச் செவியுற்ற நீங்கள் இவ்வமயம் அக்ஷரக்கல்வி என்னும் பொருளைத்தவிர வேறு உயர்தரமான அர்த்தத்தைக் கொள்ளும்படிக் கோருகிறேன். கல்வியின் லக்ஷியம் சட்டவரம்பிற்குட்பட்ட ஏற்பாட்டின் மூலமாய் பள்ளிக்கூடங்களில் கற்கப்படுவது மட்டுமன்று. மேலும் இது வருங்கால நன்மையைக்கருதி இன்று கற்றுக்கொடுக்கப்படும் கல்வியாகும். இன்று பாடசாலைகளில் கல்விகற்போர் வருங்காலத்தில் மட்டுமே வேலைசெய்வார்கள். ஆனால் சமூகத்தின்

இன்றைய நிலைமை முன்னேற்றுவதற்கு இன்று வாழும் ஜனத்திரளின் அறிவையும், செய்கையையும் சீர்திருத்த வேண்டுமல்லவா? இன்று நாட்டைப் பிடித்திருக்கும் நோயைப் போக்குவதற் கவசியமான சிகிச்சை இதுவொன்றேயாகும். பொது ஜனங்களின் வன்மை, அறியும் திறமை ஆகியவைகளுக்கேற்ப அவர்களுக்கு நல்ல ஞானத்தையும் அறிவையும் புகட்டுவதற்குவேண்டிய முறையை ஸ்திரப்படுத்தி அதன் மூலமாய் நாம்வேலைசெய்யாதவரை பொது ஜனங்களிடை ஒற்றுமையை வளர்க்கமுடியாது. நல்ல ஊக்கத்தோடு வேலை செய்யும்படி அவர்களைத் தூண்டவியலாது. அவர்களின் ஜீவனத்தை யொட்டிய கஷ்ட நிஷ்டூரங்களை யகற்றச் சாத்தியப் படமாட்டாது. சமயசந்தர்ப்பத்தைச் சார்ந்த அவசியத்தை அவர்களுக்குணர்த்த வழியிராது. ஆகவே இன்று நாட்டில் வாழும் ஜனங்களுள் கல்விகற்கும் பருவத்தைக் கடந்துவிட்டவர்களை எழுதப் படிக்கக்கூடியவர்களாய்ச் செய்துவிட வேண்டும். இவர்களுக்குக் கற்பிக்கப்படும் கல்வியானது மதம், பொருளாதாரம், ஒழுக்கம் ஆகியவைகளுக் கின்றியமையாத அறிவை வளர்ப்பதாக விருக்கவேண்டும். இக்கல்வி ஏற்ற ஒழுங்குமுறைக்கும், தக்கவரம்பிற்கு முட்பட்டதாக விருக்கும்படிச் செய்வதோடு இதைப் பொதுவாய் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள இலகுவாயு மிருக்கும்படி முயலவேண்டும்.

கல்வி வாசனையற்ற பெருந்தொகையினர்களானப் பொதுமக்கள் நம் முயற்சியின் பயனாகத் தடங்கித் தடங்கி உருதுவை வாசிப்பதோடு அதை தப்புந்தவறுமாகவேனும் எழுதவும் கற்றுக்கொண்டு விடுவார்களாயின் நாட்டிற்கு நாம் எக்காலத்திலும் செய்யமுடியாத சீர்திருத்தம் முன்னேற்றம் ஆகியவைகளைச்சார்ந்த வாயிலை விசாலமாய்த் திறந்துவிட்ட நற்பாக்கியத்தை யடைவோ மென்பது திண்ணம். பிரசங்கம், பொதுமக்களுக்குக் கல்விபுகட்டுவது ஆகியவைகளின் மூலமாய்க் குறைந்தபக்ஷம் குறிப்பிட்ட அவசியமான நன்மை ஏற்படவாவது 1926 வது ஆண்டில் வேலைசெய்ய பின்வாங்கக் கூடாது. இது பெரும் உத்தமமான காரியமென்பதை பிறகு அறிந்து கொள்ளுவோ மென்பதிலையமில்லை. தேசஊழியத்தை மேற்கொண்டிருக்கும் உத்தமர்கள் தங்கள் பிரசங்கத்தின் மூலமாய் பொதுமக்களுக்கு அறிவைப் புகட்ட முற்பட்டு இவ்விரு சாராருக்கும் நல்லசம்மந்த முண்டாகி தொடர்ச்சியாய் ஜனங்கள் உபதேசம் பெற்றுக் கொண்டே யிருப்பார்களாயின், 1926வது ஆண்டிலுள்ள சமூக ஞானத்தைக் காட்டினும் 1927 வது ஆண்டின் சமூகஞானம்

விசேஷ அபிவிருத்தியை அடைந்துவிடு மல்லவா? கீழ்காணும் நான்கு காரியங்கள் மட்டுமுள்ள திட்டத்தை வைத்துக்கொண்டு நீங்கள் வேலைசெய்ய வேண்டுமெனக் கருதுகிறேன்.

1926-வது ஆண்டின் வேலை திட்டம்.

(1) கல்விவாசனையற்ற பொதுமக்களுக்கு எழுதப்படிக்கக்கற்றுக் கொடுப்பதற்காக இராப்பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்கவேண்டும். இதற்கு அநேகமாய் மஸ்ஜித்களே ஏற்ற இடமாகும்.

(2) பொதுமக்களின் மதஉணர்ச்சி, பொருளாதாரநிலை, ஒழுக்கம் ஆகியவைகளைச்சீர்திருத்தி முன்னேற்றமடையும்படிச் செய்வதற்கென்றே இயற்றப்படும் பிரசங்கத்தொடரின் மூலமாய் ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட அறிவைப் புகட்டுவதற்கு ஏற்ற கல்விஸ்தாபனங்களையமைக்க வேண்டும். இக்கல்வி ஸ்தாபனத்திற்கு அநேகமாய் மஸ்ஜிதுகளே தகுந்த இல்லமாகும்.

(3) பொதுமக்கள் வேண்டுமளவு விஷயங்களையறிந்து கொள்ளக் கூடிய வாசகச்சாலைகளை யமைக்கவேண்டும்.

(4) ஜும்ஆவின்குத்பா (பிரசங்கம்) சீர்திருத்தமுற்று அதன் மூலமாய் ஒவ்வொரு வாரமும் பொதுமக்கள் அவசியமான நல்லறிவைப்பெற முயற்சிக்கவேண்டும். இத்திட்டத்தின் மூலமாய் பலனெய்துவதற்குரிய குத்பாக்களை (பிரசங்கங்களை) இயற்றி நாடெங்கும் பிரசுரம் செய்யவேண்டியதவசியமாகும். இவ்வருடம் ஊழியத்தின் பொறுப்பை கிலாபத்கமிட்டி ஏற்று வேலைசெய்யவேண்டுமெனக் கருதுகிறேன்.

நிதிதிரட்டுவது.

கனவான்களே! நிதி திரட்டுவதற்காகச் செய்யப்பட்டு வரும் முறையிலும் சில மாறுதலைச்செய்யவேண்டுமெனக் கருதுகிறேன். போதிய நிதியின்றி எக்காரியமும் நடைபெறமுடியாதென்பது வெளிப்படை. ஆனால் பொதுமக்களிடம் சதா பணத்தை வசூலித்துக் கொண்டே யிருப்பதோடு, நடைபெற வேண்டிய வேலை சம்பந்தமான வாக்குறுதி, விளம்பரம் ஆகியவைகளை விடுத்துக்கொண்டு மிருப்பது உசிதமல்ல. ஆகவே பொதுமக்கள் பணத்தைக்கொடுப்பதோடு அப்பணத்தின் மூலமாய் நடைபெறும் வேலையின் அளவைச் சீர்தூக்கிப்பார்க்க அவகாசமிருக்கத்தக்க முறையைக் கைக்கொண்டு நிதிதிரட்டவேண்டும். இவ்வருடம் அதி ஊக்கத்தோடு வேலைநடைபெறக் கூடியபொது உணர்ச்சியைப் பொதுமக்களிடை யுண்டுபண்ணக் கருது

வீர்களாயின், நிதி திரட்டுவதில் சதா கவனம் செலுத்திவரும் பழைய வழக்கத்தை நிறுத்திவிட வேண்டும். 1926 வது ஆண்டில் பொது மக்களிடைக் கல்வி அறிவைப் பரத்துவதற்காகத் தயாரிக்கும் நிர்மாணத் திட்டப்படி வேலை நடைபெறுவதற்குக் குறைந்த பக்ஷம் இத்தனைரூபாய் வேண்டுமென்பதை நிச்சயித்துக்கொண்டு, அத்தொகையை மூன்றுமாதங்களுக்குள் வசூலித்து விடுவதற்காக முற்பட்டு விடவேண்டும். கிலாபத்கமிட்டியைச் சார்ந்த எல்லாஸ்தாபனங்களும் மூன்றுமாதம்வரை இதேகாரியத்தை இடைவிடாது புரியவேண்டும். இம்மூன்று மாதங்களிலும் உங்களுக்குத் தொகைசெலுத்தப் பொதுமக்கள் கடமைப்பட்டிருக்கின்றனர். இம் மூன்று மாதங்களிலும் கிலாபத்கமிட்டிகளில் வேலை நடைபெறுகின்றதா? இல்லையா? என்று பொதுமக்கள் கிலாபத்கமிட்டிகளை வினவிக்கொண்டிருக்கக் கூடாது. இம்மூன்றுமாதகாலம் கழிந்தபின்னர் மற்ற ஒன்பதுமாத காலத்தில் உண்மையாயும் ஊக்கமாயும் வேலைசெய்யவேண்டும். இவ்வொன்பதுமாதகாலத்தில் ஒவ்வொரு தினத்திலும் நடைபெறவேண்டிய வேலையை யொட்டிப் பொதுஜனங்களின் சமூகத்தில் கிலாபத் கமிட்டிகள் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றன. மேலும் கிலாபத்கமிட்டிகளுக்குக் கொடுக்கப்பட்ட ரூபாய்கள் இத்தனை யென்றும் அத்தொகையின் மூலமாய் இன்ன அளவு வேலை நடைபெற்றிருக்கிறதென்றும் வருஷக்கடைசியில் பொது ஜனங்கள் தெரிந்துகொள்ள முடியும்.

முடிவுரை.

கனவான்களே! இந்நற்காரியங்களைப்புரிவதற்கு வேண்டிய அருளை அல்லாஹு தஆலா நமக்களிக்கும்படி துஆச்செய்வதுமட்டுமே இவ்வமயம் என் இறுதிக்காரியமாக விருக்கின்றது. நம் கோரிக்கை உண்மையானதாயும் நம் ஹிருதயம் உறுதியைக்கொண்டதாயுமிருக்குமாயின் நம் பிரயாணத்திலேற்படும் கஷ்டநிஷ்டூரங்களை யொட்டிச்சிந்திப்பதைவிட்டு உண்மையான வழிகாட்டியாகிய அல்லாஹு தஆலாவின் கிருபையை மட்டுமே நாம் கவனித்தவர்களாக விருப்போம்.

கான்பூர் கிலாபத் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்.

இந்தியாவிலும் இஸ்லாமிய உலகத்திலும் நடைபெறவேண்டிய காரியங்கள்.

(கிலாபத் கமிட்டிகளையும் கிலாபத் ஊழியர்களையும் பொருத்து நிற்கின்ற நிர்மாணத் திட்டம்.)

கான்பூர் கிலாபத் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:—

1வது தீர்மானம்.

சர்வதேச சங்கத்திலிருந்து அதிகாரப் பத்திரம் பெற்றிருப்பதாய்ச் சொல்லிக்கொண்டு ஷாம் தேசத்தில் பிரான்ஸ் வைத்துக் கொண்டிருக்கும் ஏற்கமுடியாத ஆதிக்கம் காரணமாய் முஸ்லிம் உலகம், கீழ்நாடு ஆகியவைகளின் சரித்திரப் பூர்வமான ஞாபகச் சின்னமாகிய தமஸ்கஸ் பட்டினத்திற்கேற்பட்ட அழிவை மிகப்பெரும் கொடிய அட்டூழியமென இம்மகாநாடு கருதுகின்றது. ஷாம் தேசவாசிகளுக் கிழைக்கப்பட்ட அநியாயத்தைக் கண்டு வருந்துவதோடு அவர்களுக்கு உதவி செய்வதற்காக டில்லியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சபைக்கு முஸ்லிம்கள் தொகை யனுப்புவார்களென்றும் நம்புகிறது. மேலும் ஷாம்தேச சகோதரர்களின் இன்றையவிடுதலைப்போர் இந்தியாவின் அனுதாபத்தைப்பெற்றிருக்கிறது. மேலும் அவர்களின் ஜெயத்தைக் கோரி இந்தியர் அனைவரும் பிரார்த்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

2வது தீர்மானம்.

'இராக்' பிரதேசமானது ஜஸீரத்துல் அரபைச்சார்ந்த நாடென்றும் ஜஸீரத்துல் அரபின் எப்பாகத்திலும் முஸ்லிமல்லாதாரின் ஆக்ஷியாவது ஆதிக்கமாவது நேர்முகமாகவோ மறைமுகமாகவோ இருந்துவர முஸ்லிம்கள் தங்கள் மதக் கட்டளையின்படிச் சம்மதிக்கமாட்டார்களென்றும் இம்மகாநாடு ஏழு வருடகாலமாகச் செய்து வந்திருக்கும் விளம்பரத்தை இப்பொழுதும் வற்புறுத்துகிறது. இராக்கில் இதுபோழ்து நடைபெற்றுவரும் ஆக்ஷி உண்மையான இஸ்லாமிய ஆக்ஷியல்ல வென்றும் பிரிட்டிஷாரின் இஷ்டத்திற்கிணங்க அமைக்கப்பட்ட ஆட்சி என்றும் இப்புதிய இராக் ஆக்ஷியின் பெயரால் மோசூல் சம்பந்தமாய்ச் செய்யப்பட்டுள்ள பிரிட்டிஷ் கோரிக்கை

நியாயமற்றதென்றும் இதையொட்டி சர்வதேச சங்கம் அளித்திருப்பதாய்ப் பறைசாற்றப்படும் தீர்ப்பு பிரிட்டனின் சூட்சிக்குட்பட்டதென்றும் வெளியிடுவதோடு, லாசேன் சமாதான உடன்படிக்கை கையெழுத்தாவதற்கு முன் "மோசூல் பிரச்னை சம்பந்தமாய் துருக்கிக்குப் பாதகமான எத்தகைய முடிவும் ஏற்படமாட்டாது" என்று பிரிட்டிஷ் பிரதிநிதியாக அம்மகாநாட்டுக்குச் சென்றிருந்த பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரி லார்டுகர்ஸன் கூறி துருக்கியரை நம்பும்படிச் செய்ததை முன்னிட்டே துருக்கிப் பிரதிநிதிகள் அவ்வுடன்படிக்கையில் கையெழுத்திட்டார்களாதலின் சர்வதேச சங்கத்தின் மோசூல் தீர்மானமும் அதையொட்டிச் செய்யப்பட்ட நடவடிக்கைகளும் லாசேன் சமாதான உடன்படிக்கைக்கு முற்றும் விரோதமானவையென்றும் இம்மகாநாடு கருதுகிறது.

மேலும், மறுக்கமுடியாத தன் உரிமையைக் காக்கும்பொருட்டு யுத்தவிளம்பரஞ் செய்யுமாறு துருக்கிதேசம் கட்டாயப்படுத்தப்பட்டுவிடின் அவ்விளம்பரம் நியாயமானதென்றும், கூடியவரைத்துருக்கிக்குதவி செய்வது கடமையென்றும் இம்மகாநாடு அறிவிக்கிறது. மேலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் இந்தியாவில் அனுஷ்டிக்கப்பட்டுவரும் ஆட்சிமுறை இந்திய சுயேச்சைக்குப் பெருந்தடையாகவிருக்கிறதென்றும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கேற்படும் ஒவ்வொரு விதமானசெல்வாக்கும் இந்தியாவின் அடிமை விலங்கை பலப்படுத்துவதாக விருக்கிறதென்றும், மகாயுத்தத்தின்போது பிரிட்டிஷாருக்கு இந்தியாசெய்த உதவியை முன்னிட்டு இந்தியாவுக்கு சுயேச்சை அளிப்பதற்குப் பதிலாய் ஜலியன்வாலாபாகில் செய்யப்பட்ட படுகொலைகளும் மற்ற கொடுமைகளும் இந்தியரின் அடிமை விலங்கை அதிகப் பலமுள்ளதாக்கி விட்டதை யனுபவத்தில்தெரிந்துகொண்டிருக்கும்இந்தியா மீண்டும் மகாயுத்தகாலத்தில் நடந்துகொண்டதைப்போன்ற தவறைப்புரிந்து தனக்குக்கேட்டை யிழைத்துக்கொள்ளக்கூடாதென்றும் கூறுகிறது. ஆகவே மோசூல் பிரச்னை சம்பந்தமான யுத்தத்தில் பிரிட்டிஷ்ஏகாதிபத்தியத்திற்கு இந்தியா ஆள், பொருள் முதலிய எவ்வித உதவியும் புரியாமலிருக்கும்படி இம்மகாநாடு முயற்சிக்கவேண்டும்.

3வது தீர்மானம்.

'அகபா' 'மஆன்' ஆகிய நாடுகள், ஹிஜாஸின் முக்கியமான பாகமாதலின் அவைகளை ஹிஜாஸிலிருந்து பிரித்து 'ஷர்கேஅர்தூ'னில் சேர்ப்பதையும் இந்நகரங்களை பிரிட்டனின் ஆதிக்கத்துக்குட்ப

டும்படிச் செய்வதையும் ஹிஜாஸின் எல்லையில் பகிரங்கமாய் ஆதிக்கம் செலுத்துவதற்காக பிரிட்டிஷார் தலையிடுவதாகவே இம்மகாநாடு கருதுகிறது.

4வது தீர்மானம்.

அமீர்முஹம்மது இப்னுஅப்துல்கரீம் அவர்களுடையும் அற்புதமான ஜெயங்களைக்கண்டு அமீர் அவர்களைப் பாராட்டுவதோடு அமீர் அவர்கள் சமூக விடுதலைக்கான வழியில் காட்டும் உறுதியானது எல்லா கீழ்நாட்டிற்கும் சுயேச்சை சம்பந்தமான ஜீவனை யளிக்கத்தக்க நற்செய்தியென்றும், இம்மகாநாடு கருதுகிறது.

5வது தீர்மானம்.

சுல்தான் அப்துல் அஜீஸ் அவர்களின் சைனியம் மதீனமாநகரிலும், ஜித்தாப்பட்டினத்திலும் அமைதியோடு பிரவேசித்ததையொட்டி சுல்தான் அவர்களை கிலாபத்கான்பரன்ஸின் இம்மகாநாடு பாராட்டுவதோடு ஷரீபின் எதேச்சாதிகார ஆட்சியும் அவ்வாட்சியின் கொடியவடுக்களும் ஹிஜாஸைவிட்டகன்று ஹிஜாஸ் பரிசுத்த மெய்தியதற்காக சந்தோஷப்படுகிறது. மேலும் ஹிஜாஸின் வருங்காலநிருவாகத்தை யொட்டி சுல்தான் அவர்கள் வெளியிட்டுவந்த எல்லா விளம்பரங்களையும் பூரணமாய் நம்புவதாக இம்மகாநாடு அறிவிப்பதோடு சுல்தான் அவர்களின் கோரிக்கையை முஸ்லிம் உலகம் அங்கீகரித்து ஹிஜாஸின் வருங்காலஆட்சியை நிர்ணயிப்பதற்காக முஸ்லிம் உலகமகாநாடு அதிசீக்கிரத்தில் நடைபெறுமென்றும் நம்புகிறது.

6 வது தீர்மானம்.

ஹிஜாஸில் இன்று நிலவியிருக்கும் ஒழுங்கு முறைகளையும், அமைதியையும் மத்தியகிலாபத் கமிட்டி நாடெங்கும் அறிவித்து ஏராளமான ஜனங்கள் இவ்வருடம் ஹஜ்ஜுக்குச் செல்லும்படி ஏற்பாடு செய்து ஹாஜிகளின் பிரயாணத்திற்கு வேண்டிய சகாயத்தைப் புரிய பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டு மென்றும் ஹாஜிகளின் சௌகரியத்திற்கு வேண்டியவைகளைச் செய்வதற்காக கிளைக்காரியாலயங்களை அவசியமேற்படின் ஜித்தாவிலாவது இதரவிடங்களிலாவது ஏற்படுத்த வேண்டுமென்றும் இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

7 வது தீர்மானம்.

தென் ஆபிரிக்காவில் வசிக்கும் நம் சகோதர இந்தியர்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அவர்கள் புரியும்கிளர்ச்சியில் இம்மகாநாடு பூரண அனுதாபம் காட்டுகிறது. மேலும் அவர்

களின் நியாயமான போரில் ஒவ்வொரு இந்தியரும் அபிமானம் வைப்பதோடு அடிமை வாழ்க்கைக்குட்பட்டிருக்கும் ஒவ்வொரு இந்தியரும் தம்மாலியன்ற உதவியைப் புரிவதற்கும் தயாராயிருப்பதாய் இம் மகாநாடு தெரிவித்துக் கொள்கிறது.

8 வது தீர்மானம்.

இந்தியாவில் கையால் நூற்றநூலைக்கொண்டு கைத்தறிகளில் நெய்த கதரை அபிவிருத்தி செய்யவேண்டியதன் அவசியத்தையும் பிரயோஜனத்தையும் பற்றி முன்போலவே உறுதிகொண்டிருப்பதாய் இம்மகாநாடு வெளியிடுகின்றது. மேலுல் அகிலபாரத சர்க்கா சங்கத்தில் (All India Spinners Association) முஸ்லிம்கள் ஏராளமாய்ச் சேருவார்களென்றும், தேசத்தின் நன்மைக்குரிய இப்பெருங் காரியத்தில் தேசத்தின் மற்ற சமூகங்களைக் காட்டினும் முஸ்லிம்கள் பின்னடையாமலிருப்பார்களென்றும் இம்மகாநாடு நம்புகிறது.

9 வது தீர்மானம்.

கிலாபத் கமிட்டியின் நிர்மாணத் திட்டப்படி நாடெங்கும் இலகுவாய் வேலை நடைபெறுவதற்கு மாகாணக் கமிட்டிகளும் ஜில்லா கமிட்டிகளும் நல்லமுறைக் குட்பட்டுத் தொண்டர்களைச் சேர்த்துப் பழக்கவேண்டு மென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

10 வது தீர்மானம்.

கிலாபத் கமிட்டிகளைச் சார்ந்த ஊழியர்களின் முயற்சி, தைரியம் ஆகியவைகளைப் பரீக்ஷிக்கக்கூடிய ஓர் நெருக்கடியான சந்தர்ப்பம் தோன்றிவிட்டதென்று இம்மகாநாடு கருதுவதோடு அவர்களின் சென்ற ஆறு வருடப் பிரயாசை வியர்த்தமாகாதிருக்க வேண்டு மென்றும் இந்தியமுஸ்லிம் சமூகவாழ்க்கையைச் சீர்திருத்தும் பொருட்டுண்டான ஜீவன் அழியாதிருக்கவேண்டு மென்றும் அவர்கள் விரும்புகிறார்களாயின் மகாணங்கள், ஜில்லாக்கள், கிராமங்கள் தோறும் கிலாபத் கமிட்டிகளை ஸ்தாபிப்பது, பழையகமிட்டிகளைப் புதுப்பித்துப் பலப்படுத்துவது முதலிய காரியங்களை இவ்வருட ஆரம்பத்தின் முதல் மூன்றுமாதங்களுக்குள் செய்துமுடித்துவிட வேண்டு மென்று எல்லா கிலாபத் ஊழியர்களையும் கேட்டுக்கொள்கிறது.

11 வது தீர்மானம்.

வரவேற்ப்பு கமிட்டித் தலைவரான மௌலானா ஸையித்பஜ்லுல் ஹஸன் சாஹிப் ஹஸ்ரத்மோஹானீ அவர்கள் தங்களின் வரவேற்புப்

பிரசங்கத்தில் மத்திய கிலாபத் கமிட்டியைத்தாக்கி அனுவசியமாய்க் குறைகூறியிருப்பதோடு நிகழாத காரியங்களை ஆதாரமாகக் கொண்டும் சில விஷயங்களை வரைந்திருக்கிறார்கள். ஆகவே மேற்கண்ட நியாயமற்ற பாகத்தை அப்பிரசங்கத்தினின்று இம்மகாநாடு நீக்கிவிடுகிறது.

12வது தீர்மானம்.

மத்திய கிலாபத் கமிட்டியின் காரியாலயம் பம்பாயிலிருப்பதால் பம்பாய் மாகாணத்தைப் பொருத்தவரைத்தனிமாகாணக்கமிட்டி அவசியமில்லை யென்றும் மத்திய கிலாபத் கமிட்டி பம்பாய் மாகாணக் கமிட்டியின் பொறுப்பை ஏற்று வேலைசெய்ய வேண்டுமென்றும்........ இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

13வது தீர்மானம்.

டில்லியிலிருக்கும் ஜாமிஅயெ மில்லியா என்னும் தேசீய கலாசாலையானது முஸ்லிம் சமூகத்தின் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு மிகவும் அவசியமான கலாசாலை என்பதை முஸ்லிம்கள் கவனிக்காமல் அலட்சியமாக இருந்து விட்டனரென்றும் அக்கலாசாலை ஸ்திரமாக என்றும் நடைபெற்று வரவேண்டியது அவசிய மென்றும் அக்கல்விச் சாலைக்கு எல்லா முஸ்லிம்களும் விசேஷ பொருளுதவி செய்யவேண்டு மென்றும் ஒவ்வொரு மகாணமும் அக்கலா சாலைக்குப் போதிய மாணவர்களை யனுப்பவேண்டுமென்யும் இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

14வது தீர்மானம்.

மாப்பிள்ளைக் கைதிகளின் குடும்பத்தினரை அந்தமான் தீவுகளுக்கு அனுப்புவது சம்பந்தமாய் இந்தியா கவர்மெண்டார் அனுஷ்டித்து வரும் திட்டத்தை கிலாபத்கான்பரன்ஸின் இம்மகாநாடு வெறுப்பதோடு அத்தீவுகளில் பற்பல கொடுங்குற்றவாளிகளும் அவர்களின் குடும்பங்களும் வசித்துவருவதாலும் அங்கு மாதர்களைக் காட்டினும் ஆடவர்கள் பதின் மடங்கு அதிகமாக விருப்பதாலும் மாப்பிள்ளைக் கைதிகளின் குடும்பத்தினரின் ஒழுக்கத்துக்கு ஹானி ஏற்படக்கூடுமென சந்தேகமிருந்து வருகிறதென்றும், அத்தீவுகளின் சுகாதாரம் மனிதர் வசிப்பதற்கேற்றதாகவில்லை என்று சர்க்கார் ஜெயில் கமிட்டி ரிப்போர்ட்டு செய்திருப்பதாலும் அத்தீவுகளுக்கு மாப்பிள்ளைக் கைதிகளின் பெண்டுபிள்ளைகளை அனுப்பக் கூடாதென்றும் இம்மகாநாடு அறிவிக்கின்றது. மேலும், மாப்பிள்ளை

களையும் அவர்களின் பெண்டு பிள்ளைகளையும் அவர்களின்சுயநாடாகிய மலையாளத்தைவிட்டு வேறு எத்தகைய வளமான தேயத்திற்கும் அனுப்பக்கூடாதென்று இம்மகாநாடு அறிவிக்கின்றது.

15வது தீர்மானம்.

முஸ்லிம் அனுஷ்டைகளை பரிபாலிப்பதற்கான ஸ்தாபனங்கள் அவசியமாகத்தேவைப்படும் இடங்கள்பல இருக்கின்றனவென்றும்இம்முக்கியமான காரியத்தை மத்திய கிலாபத் கமிட்டி கவனித்து அவசியத்திற்கேற்றவாறு கூடியவரை அனுஷ்டை பரிபாலன ஸ்தாபனங்களை அமைத்து நடத்தி வரவேண்டுமென்றும் கிலாபத்கான்பரன்ஸின் இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

16வது தீர்மானம்.

தேசத்தின் பெரும்துர்அதிர்ஷ்ட வசத்தினால் ஹிந்துமுஸ்லிம்களுக்குள் வேற்றுமை அதிகரித்துக்கொண்டு வருவதால் முஸ்லிம்களைப்பொருத்தவரை சமூகக்கிளர்ச்சியிலும் தேசவிடுதலைக்கான காரியத்திலும் அசைக்கமுடியாத ஒரே நிலையிலேயே முஸ்லிம்கள் இருந்து வரவேண்டுமென்றும் எச்சந்தர்ப்பத்திலும் இந்நிலையிலிருந்து முஸ்லிம்கள் நழுவிவிடக்கூடாதென்றும் இக்கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது.

17வது தீர்மானம்.

முஸ்லிம்கள் தங்கள் நாட்டின் நன்மைக்கான ஊழியத்தில் தங்களின் முழுபலத்தையும் செலுத்தவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டதென்றும் தேசத்தில் சமூக ஐக்கிய உணர்ச்சியை வளர்க்கவும் அவ்வுணர்ச்சியை பாதிக்கும் இடையூறுகளை யகற்றவும் இந்திய முஸ்லிம்கள் ராஜீய அறிவு, கல்வி, பொருளாதாரம் ஆகிய துறைகளில் முன்னேற்ற மடைவதற்கான காரியத்தைஉடனே ஆரம்பித்து விடவேண்டுமென்றும், காலத்தின் அவசியத்திற்கேற்றவாறு பொதுமக்களின் அறிவைப் பெருக்கவேண்டுமென்றும் பொதுமக்களிடைகல்வி அபிவிருத்தி ஏற்படும்பொருட்டு அடியிற்கண்ட நான்கு முறைகளைப் பின்பற்றி வேலைசெய்ய வேண்டுமென்றும் இம் மகாநாடு தீர்மானிக்கின்றது.

(இந்நான்கு காரியங்களும் மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களின் அக்கிராசனப் பிரசங்க இறுதியில் வரையப்பட்டிருக்கின்றன. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 5 லக்ஷரூபாய்வேண்டு மென்றும் கிலாபத் மகாநாடு கடைசியாய் தீர்மானித்திருக்கிறது. கிலாபத் ஊழியர்கள் ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு ஆகியமூன்றுமாதங்களுக்குள்

போதுமளவு நிதிவசூலித்து விடவேண்டுமென்று மௌலானு அவர்கள் தங்களின் அக்கிராசனப் பிரசங்கத்திலும் கூறியிருக்கின்றூர்கள். இத்தீர்மானம் நிறைவேறி பிப்ரவரிமீ 10 உ யாகிய இன்று 40 நாட்களுக்கு மேலாகிவிட்டது. 5 லக்ஷம் சேகரிக்கவேண்டிய 90நாட்களில் எஞ்சியிருக்கும் தினங்கள் 50 கூட இல்லை. கிலாபத்கமிட்டிகளும் கிலாபத் தலைவர்களும் இன்றுவரை நிதிவசூலிப்பதற்கான காரியத்தை தீவிரமாய் ஆரம்பித்திருப்பதாய்த் தெரியவில்லை. ஆனுல் கான்பூர் கிலாபத் மகாநாட்டின் அக்கிராசனர் மௌலானு அபுல்கலாம் ஆஜாத் அவர்களும் மௌலானு ஷௌகத் அலி அவர்களும் நிதிதிரட்டுவதற்காக பர்மா சென்றிருக்கிறூர்கள். ஆகவே பர்மாவில் வியாபாரம்செய்து வரும் தமிழ்நாட்டார் இச்சமயத்தில் தாராளமாய் பொருளுதவி செய்வார்களென்று எதிர்பார்ப்பது மிகையாது. (ப-ர்)

ஹிஜாஸின் நிர்வாகம்.

மக்கமாநகரில் நடைபெறவிருக்கும் முஸ்லிம் உலகமகா நாட்டின் தீர்மானத்திற் கிணங்க ஹிஜாஸில் ஜனநாயக ஆக்ஷி நிலவு மென்னும் நம்பிக்கையைக் கொண்டிருப்போர் சுல்தான் இப்னு ஸுஊத் அவர்கள் ஹிஜாஸின் அரசராக அமர்ந்திருப்பதாய் வரும் செய்திகளைக் கண்டு பீதி யுறுமலிருக்கும்படிக் கோருகிறேம். இச்செய்திகள் மௌலானு அபுல்கலாம் ஆஜாத் மௌலானு ஷௌகத் அலி ஆகிய இரு தலைவரின் நம்பிக்கையைக்கெடுத்து விடவில்லை.

இன்ஷா அல்லாஹுதஆலா மறுசஞ்சிகையில் இதைப்பற்றி விரிவாய் எழுதுவோம். ப-ர்.